# [illegible]





*[illegible] 2000-2004 [illegible]*

தங்கள் சட்டபூர்வ அமைதிவழி அரசியல் உரிமைகளைப் பயன்படுத்துவதற்காக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் இளையோரின் புதிய தலைமுறையொன்று பாதுகாப்புப் படையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக அமைப்பாளர்கள் இந்த

அபாயங்கள் குறித்து அதிக விழிப்புடன் இருக்க வேண்டும் என பிரான்சிஸ் ஹரிசன் குறிப்பிடுகின்றார்.

‘எந்த பிரச்சனையிலும் மாட்டிக்கொள்வேன் என்று நான் நினைக்கவில்லை’ எனக்கூறுகின்றார் வெளிநாட்டில் உள்ள ஒருவர் தனது வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்ப அனுமதித்த இருபது வயதான ஒருவர். அது காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கான பணம் என அவருக்குக் கூறப்பட்டது. அதற்கு அவரது பெற்றோர் கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ”ஏதேனும் ஆபத்து இருக்கக்கூடும் என்று நாங்கள் அனைவரும் நினைத்தோம், ஆனால் இந்தளவு பிள்விளைவுகள் நடக்கும் என்று நாங்கள் யாரும் எதிர்பார்க்கவில்லை’ இப்போது லண்டனில் இருக்கும் அவர் கூறினார். அவரது உடல் இப்போது நிரந்தரமாக சித்திரவதையின் வடுக்களைத் தாங்கியுள்ளது.

2020ம் ஆண்டில், ஒருநாள் அதிகாலை அவரது வாழ்கையைப் புரட்டுப்போட்டது. அவரை கைது செய்ய TID இன் அதிகாரிகள் வந்தனர். “நான் ஜீப்பை நோக்கி வலுக்கட்டாயமாகக் கொண்டுசெல்லப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் கடையாகப் பார்த்தது, என் அப்பா என் அம்மாவை ஆறுதல்படுத்திக் கொண்டிந்ததைத்தான்’ என்று அவர் கூறினார்.. தடுப்புக்காவலில் அவருக்கு நிகழ்ந்த பாலியல் சித்திரவதையின் விவரங்கள் மிகவும் கொடூரமானவை மற்றும் அச்சிட முடியாதவை. அவரது குடும்பத்தினர் ஒருவாறு லஞ்சம் கொடுத்து அவரை விடுவித்தனர்.

அதே வயதுடைய மற்றொரு பையன் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் நடத்திய போராட்டங்களுக்குச் செல்லத் தொடங்கினார். பின்னர்; 2019 ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் துண்டு பிரசுரங்களை விநியோகிக்க உதவினார். கோட்டாபய ராஜபக்சே தேர்ந்தெடுக்கப்பட்டால் வெள்ளை வாகனக் கடத்தல்கள் மீண்டும் தொடங்கும் என்று துண்டுப்பிரசுரங்கள் நகைமுரணாக எச்சரித்தன. சாதாரண உடைகளில் உளவுத்துறை அதிகாரிகள் கூட்டங்களை கவனிப்பதை அவர் கவனித்தார், ஆனால் அவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ‘அந்த நேரத்தில் நான் முற்றிலும் பாதுகாப்பாக உணரவில்லை, ஆனால் நான் அதை மக்களுக்காக செய்ய விரும்பினேன்,” என்று அவர் கூறினார். அங்கே எச்சரிக்கப்பட்டிருந்தும் கூட அவர் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

2020 இல் ஒரு இரவு அவர் அந்தி வேளையில் வீட்டுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது ஒரு வெள்ளை வாகனத்தை கவனித்தார். அவர் கடந்து செல்லும்போது, மூன்று பேர் வெளியே குதித்து அவர் பெயரைக் கேட்டனர். ஒருவர் அவரது கழுத்தைப் பிடித்தார், மற்ற இருவர் அவரை வாகனத்தின் பின்பகுதிக்குள் தள்ளி, முகத்தை கீழே வைத்து, கண்களை மறைத்துக் கட்டியதுடன் கயிற்றால் கைகளைப் பிணைத்தனர். அவர் உதவிக்காக அலற முயன்றபோது, அவர்கள் அவரது வாயை மூடினர். “அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள் என்று நான் நினைத்தேன். நான் மிகுந்த அச்சத்தில் உறைந்தேன், அனைத்தும் மிகவும் வேகமாக நிகழ்ந்ததால் என்ன நடக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. நான் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன்” என்றார். வாகனத்தின் பின்புறத்தில் ஆண்கள் சிங்களத்தில் கதைத்தவாறு அவரை உதைத்தனர் அவரை “தமிழ் நாய்” என்று அழைத்தனர். அவர்கள் ஓரிடத்தை வந்தடைந்தபோது, அவர் ஒரு இருண்ட துர்நாற்றம் வீசும் அறைக்குள் தள்ளப்பட்டார்.

முதல்நாள் இரவில் கதவைத் திறந்து, அவர்மீது நீரை ஊற்றி அவரது நித்திரையைத் தடுத்தனர். மறுநாள் அவர் சுவரில் இரத்தக் கறைகளுடன் காணப்பட்ட ஓர் அறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே மூலையில் குழாய்கள், மட்டைகள், கம்பிகள் மற்றும் நைலான் கயிறு என்பன இருந்தன. ஒரு சிங்களவர் ஏன் பிரிவினைவாதத்தை புதுப்பித்து மக்களை அரசுக்கு எதிராக திருப்பிவிட முயற்சிக்கிறாய் என்று கேட்டார். பின்னர் அவருக்கான சித்திரவதை தொடங்கியது. “அவர்களில் ஒருவர் என் தலையில் பெட்ரோல் ஊறிய பாலிதீன் பையால் மூடி மூச்சுத் திணறலை ஏற்படுத்தினார். என்னால் மூச்சு விட முடியவில்லை, என் முகத்தில்

கடுமையான எரிச்சல் ஏற்பட்டது. நான் சுயநினைவை இழந்து கீழே விழுந்தேன்” என்றார். மறுநாள் காணாமல் போன போராட்டங்களில் ஈடுபட்ட மற்றவர்களையும் ‘ஜனாதிபதிக்கு எதிராக வேலை செய்பவர்களையும்” அடையாளம் காணும்படி அவரிடம் கேட்கப்பட்டது.

விசாரணையாளர்கள் அவரது முகத்தைக் கீழ் நோக்கி ஒரு வாங்கிலில்; கட்டி, பிரம்பால் உள்ளங்கால்ளில் அடித்தனர், அது அவரது உடலில் மின்சாரத் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரை அடித்து, சிகரட்டுக்களால் எரிகாயம்வைத்து, பாதித்தண்ணீரில் மூச்சுணத்திணறடிப்புச்செய்து, அடித்துச் சித்திரவதைசெய்து பின்னர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கின்றார். இவற்றுடன் சேர்த்து இப்பத்திரிகை இங்கே வெளியிட முடியாத வார்த்தைப் பிரயோகங்களால தமிழர்களை அசிங்கமாகத் திட்டி அவமதித்தார்கள். இவ்விளைஞன் அப்போதுதான் வாழத்தொடங்கியிருந்தால், ஆனால் அன்றைய நாளில் இறப்பது மேல் என்ற எண்ணத்தில் ஒரு தடுப்பறையில் நிர்வாணநிலையில் படுத்துக்கிடந்தான்.

நாங்கள் பார்த்த பாதிக்கப்பட்டவர்களில் மிக இளையவரின் வயது 19 மட்டுமே. போரில் இறந்தவர்கள் நினைவு நிகழ்வுகள், காணாமல் போனோர் போராட்டங்கள், P2P அணிவகுப்பு அல்லது தமிழ் அரசியல் கட்சிகளுக்கு உதவுதல் என்பவற்றில் பங்கெடுக்க முன்வந்த போது சித்திரவதைக்கு ஆளாக நேரிடும் என்று அவர்களில் யாரும் உணரவில்லை. பலருக்கு இது அரசியல் விழிப்புணர்வின் ஒரு பகுதியாக இருந்தது. ‘ஒரு பெரிய எதிர்ப்புப் போராட்டத்தில் இது எனது முதல் அனுபவம்” என்று இருபதுகளில் இருந்த மற்றொரு இளைஞன் கூறினார், “இந்த விடயத்தில் நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன்.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை எண்ணி அழுவதைப் பார்ப்பது ஒரு உணர்ச்சிபூர்வமான அனுபவம்; அது நீதிக்காக வேலை செய்ய வேண்டும் என்ற என்னுடைய நிலைப்பாட்டை மேலும் தீவிரமாக்கியது” என்றார். அவர் பதாகைகள் மற்றும் அட்டைகளை அச்சிடுவதில் ஈடுபட்டார் – அரசுக்கு எவ்வகையிலும் அச்சுறுத்தலாக இல்லை. ஒரு வருடம் கழித்து, கடத்தப்பட்டு சித்திரவதையால் சீரழிக்கப்பட்டு, உலகின் மிகப்பரபரப்பான கடற்போக்குவரத்துப்பாதையான ஆங்கில கால்வாயின் அலைகடலில், எரிபொருள் இல்லாத சிறிய திறந்த இறப்பர் படகில் மேலும் முப்பத்தியொரு மக்களுடன் மேலும் கீழும் எறியப்பட்டபடி பயணம் செய்தார். அவர் உயிருடன் கரை சேர்ந்தது அதிஸ்டமே.

“2020 மற்றும் 2021இல் இங்கிலாந்திற்கு வந்த எனக்குத் தெரிந்த ஏழு தமிழ் ஆண்கள் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். பிரிட்டனில் அகதியாக இருப்பது ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை ஒரு கடினமான சோதனையாகும். இந்த நாட்டில் நாங்கள் மட்டுமே அவரை மரியாதையுடன் நடத்தினோம்” என்று ஒருவர் கூறினார். ஒரு சிலருக்கு அவர்களைப் பராமரிக்க நெருங்கிய குடும்பம் உள்ளது, ஆனால் மற்ற தமிழர்கள் அறிமுகமானவர்களுடன் தங்கியிருக்கிறார்கள் அத்துடன் இங்கு தஞ்சம் வழங்கும் செயல்முறை பல ஆண்டுகளாக இழுக்கப்படுவதால், அவர்களது குடும்பங்கள் கடனில் தள்ளப்படுகின்றன. “நான் இதுவரை என் குடும்பத்தை விட்டு விலகியதில்லை” என்று பணம் பெற்ற சிறுவன் கூறினார். “நான் வீட்டிற்கு செல்வது பாதுகாப்பானது அல்ல என்பதால் எனக்கு இப்போது வேறு வழியில்லை என்று எனக்குத் தெரியும், ஆனால் அவர்கள் இல்லாமல் நான் கஸ்டப்படுகிறேன். என்னுள் எந்த நம்பிக்கையும் கொள்வது கடினமாகவுள்ளது” என்றான்.

# [illegible] !


104
DAY
aying that thos

## [illegible]

[illegible]




ஆகஸ்ட் 30 சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினம். உண்மையில் இதுபோன்ற ஒரு தினத்தை கொண்டாட இந்த உலகம் வெட்கப்பட வேண்டும். மனித உயிர்களுக்கும் மனித உரிமைக்கும் எதிரான அநீதிகளின் அதிகரிப்புதான் இந்த நாளை கொண்டாடுகின்ற சூழலை உருவாக்குகின்றது. இந்த நாளை கொண்டாடுகின்ற இனமான நாம்

ஆகிவிட்டதை எண்ணி மிகவும் துயருர வேண்டி இருக்கின்றது. ஈழத் தெருக்கள் என்பது உண்மையில் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை தேடியலைகின்ற அன்னையர் நிலம்தான்.

காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளையொன்றின் அன்னையொருத்தியின் முகத்தை பார்ப்பது அவ்வளவு எளிதல்ல. அவரின் கண்களை பார்ப்பது அவ்வளவு எளிதல்ல. காலத்துயரம் நிரம்பிய அக் கோலத்தை பார்ப்பது என்பது மனசாட்சி உள்ள மனிதர்களை உலுப்புகின்ற செயல். போர் முடிந்து கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பிள்ளைகளை அரசிடம் தொலைத்த அன்னையர்களும் தந்தையர்களும் அழுது புலம்பி போராட்டத்தை நடாத்தியே வருகின்றனர். உலகிலேயே இவ் அவலம் அதிகரித்திருப்பது இலங்கையில்தான்.

உலக அளவில் லட்சக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பாக சர்வதேச புள்ளி விபரங்கள் சொல்கின்றன. இலங்கை அரசு நடாத்திய இன அழிப்பு போரில் ஒன்றரை லட்சம் மக்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். பல ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். எனவே உலகில் அதிகம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாடு இலங்கை என்ற பெருமையும் உண்டு.

காணாமல் ஆக்கப்படுதல் என்பது இன அழிப்பின் ஒரு உபாயமாகத்தான் பயன்படுத்தப்படுகின்றது. உலகில் ஜனநாயக ரீதியில் உரிமைகளை கோருகிறவர்களை காணாமல் ஆக்குவது என்பது ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகின்றது என்ற கருத்து உண்டு. உண்மையில் அதை கனகச்சிதாக இலங்கைக்குப் பொருந்துகின்றது. உரிமை கோரி போராடிய ஈழத் தமிழ் மக்களை காணாமல் ஆக்குவதை ஒரு வழிமுறையாகவும் ஆயுதமாகவும் இலங்கை அரசாங்கம் கையாண்டு வருகின்றது.

ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே அரசாங்கம் காணாமல் போதலை ஒரு கருவியாக கையாள்கின்றது. குறிப்பாக இராணுவத்தின் வசம் போரில் வீழ்ந்த தமிழர் பகுதிகளில் காணாமல் ஆக்கப்படுதலின் வாயிலாக இளைஞர்கள் யுவதிகள் இல்லாமல் செய்யப்படுகின்றனர். காணாமல் ஆக்கப்படும் அவர்கள் மிக மோசமான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். சில கொலைகள் அப்படி அம்பலமாகியுமுள்ளன.
சிங்கள இராணுவத்தின் வசமிருந்த யாழ்ப்பாணம் போன்ற அரச காட்டுப்பாட்டு பகுதிகளில் வீட்டை விட்டு வெளியில் சென்ற பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். ஏன் வீடுகளுக்குள் நுழைந்தும் இரண்டு மூன்று சகோதரர்களாக கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் போது போரில் கைது செய்யப்பட்ட பல இளைஞர்இ யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன் போர் முடிவுக்கு வந்த பின்னர் சரணடைந்தவர்களும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றவர்களும்கூட காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இன்றைக்குப் போர் முடிந்து பத்தாண்டுகள் கடந்தும் இலங்கை அரசாங்கம்இ இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை சொல்லாமல் கள்ள மௌனம் சாதித்து வருகின்றது. அவர்கள் உயிருடன் உள்ளனரா? அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இலங்கை அரசாங்கம் சொல்ல வேண்டியது அவ் அரசின் வகை கூறலும் பொறுப்புமாகும். இதிலிருந்து ஒருபோதும் இலங்கை அரசாங்கம் தப்பிக்கொள்ள முடியாது. இது மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட மிகவும் உணர்வுபூர்வமான சிக்கலான விடயமாகும்.

காணாமல் ஆக்கப்படுதல் இலங்கையின் கொடூரமான இன ஒடுக்குமுறையை இனவழிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. அது மாத்திரமல்லஇ இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்களை தனது சொந்தப் பிரஜைகளாக கருதவில்லை. இன்னொரு நாட்டின் அடிமைகளாக கருதியதினாலேயே இவ்வாறு காணாமல் ஆக்கியிருக்கிறது.

தமிழ் மக்கள் தமது தாயகத்தை கோரினால் காணாமல் ஆக்கப்படுவார்கள் என்ற மிக மோசமான அச்சுறுத்தலையே இதன்மூலம் இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு விடுத்திருக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில், சர்வதேச தலையீடுதான் நீதியைப் பெற்றுத் தரும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. உண்மையில் இந்த விடயத்தை அரசியல் முதலீடாக கருதாமல் உணர்வுபூர்வமான விடயமாக கருதிஇ விளைவுகளை உருவாக்கும் செயற்பாடுகளில் தமிழ் தலைமைகள் ஈடுபட வேண்டும். இதனை ஆதாரபூர்வமான விடயங்களுடன் சர்வதேச ரீதியாக வழக்குகளை பதிவு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே நீதிக்கான வழிமுறையாகும்.


உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் மிகுந்த ஆளுமைகள். எமது இனத்தின் வளத்திற்கும் செழிப்புக்கும் அடிப்படையானவர்கள். அத்தகைய மனிதர்களை இழந்த இந்த மண் எத்துணை இழப்பை சந்தித்திருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள்? ஈழப் போரில் இலங்கை அரசு இழைத்த அநீதிகளை உலுப்பும் ஒரு ஆயுதமாகவும் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் மாறியிருக்கிறது. இதற்கு இலங்கை அரசு பதில் அளித்தே ஆக வேண்டும். இலங்கை அரசு அளிக்கும் பதில் என்பது பல்வேறு உண்மைகளை அம்பலம் செய்வதுடன் இத்தீவில் ஈழத் தமிழரின் விடுதலைக்கும் அமைதிக்குமான திறவுகோலாகவும் இருக்கும். அதுவே காயம்பட்ட இனத்திற்கான மருந்தும் நீதியுமாகும்.



# காணாமல் ஆக்கப்படுதல் என்பது இனவழிப்பின் உபாயமே!



**உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் மிகுந்த ஆளுமைகள். எமது இனத்தின் வளத்திற்கும் செழிப்புக்கும் அடிப்படையான வர்கள். அத்தகைய மனிதர் களை இழந்த இந்த மண் எத் துணை இழப்பை சந்தித்திருக் கிறது என்பதை எண்ணிப் பாருங்கள்? ஈழப் போரில் இலங்கை அரசு இழைத்த அநீதி களை உலுப்பும் ஒரு ஆயுதமாகவும் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் மாறியிருக்கிறது.**



தீபச்செல்வன்

ஈழத் தீவில் காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஒரு இனத்தை துடைப்பதற்கான பெரு உபாயமாக கையாளப்படுகிறது. இங்கே நிலம் காணாமல் போகிறது. கடல் காணாமல் போகிறது. காடுகள் காணாமல் ஆக்கப்படுகின்றன. மனித உயிர்களோ இவை யாவற்றையும் விட அற்பமாக கருதப்பட்டு காணாமல் ஆக்கப்படுகின்றன. இன்றைக்கு இனவழிப்பின் சாட்சிகளாக இருப்பவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களே. இல்லாதவர்களே எங்கள் சாட்சிகள். இல்லாதவர்கள் எங்கள் இனத்திற்காக போராடுவதைப் போல இருக்கும் நாம் போராடுவதில்லை என்பது எத்துணை துயரமானது? இல்லாதவர்கள் இருப்பதைப்போல போராட இருக்கும் நாமோ இல்லாதவர்களைப் போல இருக்கிறோம்.

ஆகஸ்ட் 30 சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினம். உண்மையில் இதுபோன்ற ஒரு தினத்தை கொண்டாட இந்த உலகம் வெட்கப்பட வேண்டும். மனித உயிர்களுக்கும் மனித உரிமைக்கும் எதிரான அநீதிகளின் அதிகரிப்புதான் இந்த நாளை கொண்டாடுகின்ற சூழலை உருவாக்குகின்றது. இந்த நாளை கொண்டாடுகின்ற இனமான நாம் ஆகிவிட்டதை எண்ணி மிகவும் துயருற வேண்டி இருக்கின்றது. ஈழத் தெருக்கள் என்பது உண்மையில் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை தேடியலைகின்ற அன்னையர் நிலம் தான்.

காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளையொன்றின் அன்னையொருத்தியின் முகத்தை பார்ப்பது அவ்வளவு எளிதல்ல. அவரின் கண்களை பார்ப்பது அவ்வளவு எளிதல்ல. காலத்துயரம் நிரம்பிய அக் கோலத்தை பார்ப்பது என்பது மனசாட்சி உள்ள மனிதர்களை உலுப்புகின்ற செயல். போர் முடிந்து கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பிள்ளைகளை அரசிடம் தொலைத்த அன்னையர்களும் தந்தையர்களும் அழுது புலம்பி போராட்டத்தை நடாத்தியே வருகின்றனர். உலகிலேயே இவ் அவலம் அதிகரித்திருப்பது இலங்கையில்தான்.

உலக அளவில் லட்சக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதாக சர்வதேச புள்ளி விபரங்கள் சொல்கின்றன. இலங்கை அரசு நடாத்திய இன அழிப்பு போரில் ஒன்றரை லட்சம் மக்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். பல ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். எனவே உலகில் அதிகம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாடு இலங்கை என்ற பெருமையும் உண்டு.

காணாமல் ஆக்கப்படுதல் என்பது இன அழிப்பின் ஒரு உபாயமாகத்தான் பயன்படுத்தப்படுகின்றது. உலகில் ஜனநாயக ரீதியில் உரிமைகளை கோருகிறவர்களை காணாமல் ஆக்குவது என்பது ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகின்றது என்ற கருத்து உண்டு. உண்மையில் அதை கனகச்சிதாக இலங்கைக்குப் பொருந்துகின்றது. உரிமை கோரி போராடிய ஈழத் தமிழ் மக்களை காணாமல் ஆக்குவதை ஒரு வழிமுறையாகவும் ஆயுதமாகவும் இலங்கை அரசாங்கம் கையாண்டு வருகின்றது.

ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே அரசாங்கம் காணாமல் போதலை ஒரு கருவியாக கையாள்கின்றது. குறிப்பாக இராணுவத்தின் வசம் போரில் வீழ்ந்த தமிழர் பகுதிகளில் காணாமல் ஆக்கப்படுதலின் வாயிலாக இளைஞர்கள், யுவதிகள் இல்லாமல் செய்யப்படுகின்றனர். காணாமல் ஆக்கப் படும் அவர்கள் மிக மோசமான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். சில கொலை கள் அப்படி அம்பலமாகியுமுள்ளன.

சிங்கள இராணுவத்தின் வசமிருந்த யாழ்ப்பாணம் போன்ற அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் வீட்டை விட்டு வெளியில் சென்ற பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். ஏன் வீடுகளுக்குள் நுழைந்தும் இரண்டு மூன்று சகோதரர்களாக கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் போது போரில் கைது செய்யப்பட்ட பல இளைஞர், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன் போர் முடிவுக்கு வந்த பின்னர் சரணடைந்தவர்களும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றவர்களும்கூட காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இன்றைக்குப் போர் முடிந்து பத்தாண்டுகள் கடந்தும் இலங்கை அரசாங்கம், இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை சொல்லாமல் கள்ள மௌனம் சாதித்து வருகின்றது. அவர்கள் உயிருடன் உள்ளனரா? அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இலங்கை அரசாங்கம் சொல்ல வேண்டியது அவ் அரசின் வகை கூறலும் பொறுப்புமாகும். இதிலிருந்து ஒருபோதும் இலங்கை அரசாங்கம் தப்பிக்கொள்ள முடியாது. இது மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட மிகவும் உணர்வுபூர்வமான சிக்கலான விடயமாகும்.

காணாமல் ஆக்கப்படுதல் இலங்கையின் கொடூரமான இன ஒடுக்குமுறையை இனவழிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. அது மாத்திரமல்ல, இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்களை தனது சொந்தப் பிரஜைகளாக கருதவில்லை. இன்னொரு நாட்டின் அடிமைகளாக கருதியதினாலேயே இவ்வாறு காணாமல் ஆக்கியிருக்கிறது. தமிழ் மக்கள் தமது தாயகத்தை கோரினால் காணாமல் ஆக்கப்படுவார்கள் என்ற மிக மோசமான அச்சுறுத்தலையே இதன்மூலம் இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு விடுத்திருக் கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில், சர்வதேச தலையீடுதான் நீதியைப் பெற்றுத் தரும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. உண்மையில் இந்த விடயத்தை அரசியல் முதலீடாக கருதாமல் உணர்வுபூர்வமான விடயமாக கருதி, விளைவுகளை உருவாக்கும் செயற்பாடுகளில் தமிழ் தலைமைகள் ஈடுபட வேண்டும். இதனை ஆதாரபூர்வமான விடயங்களுடன் சர்வதேச ரீதியாக வழக்குகளை பதிவு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே நீதிக்கான வழிமுறையாகும்.

உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் மிகுந்த ஆளுமைகள். எமது இனத்தின் வளத்திற்கும் செழிப்புக்கும் அடிப்படையானவர்கள். அத்தகைய மனிதர்களை இழந்த இந்த மண் எத்துணை இழப்பை சந்தித்திருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள்? ஈழப் போரில் இலங்கை அரசு இழைத்த அநீதிகளை உலுப்பும் ஒரு ஆயுதமாகவும் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் மாறியிருக்கிறது. இதற்கு இலங்கை அரசு பதில் அளித்தே ஆக வேண்டும். இலங்கை அரசு அளிக்கும் பதில் என்பது பல்வேறு உண்மைகளை அம்பலம் செய்வதுடன் இத்தீவில் ஈழத் தமிழரின் விடுதலைக்கும் அமைதிக்குமான திறவு கோலாகவும் இருக்கும். அதுவே காயம்பட்ட இனத்திற்கான மருந்தும் நீதியுமாகும்.


# ????????




-தந்திரீகன்-

சிறிலங்காவில் பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 42 ஆண்டுகள் முழுதாக நிறைவுக்கு வந்துவிட்டது. 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடமேறிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தினை 1979ஆம் ஆண்டு ஜுலை 19ஆம் திகதி அவசர அவசரமாக கொண்டுவந்து நிறைவேற்றியிருந்தது.

1972 ஆம் ஆண்டின் குற்றவியல் நீதி ஆணைக்குழுக்கள் சட்டம், 1972ஆம் ஆண்டின் செலாவணி கட்டுப்பாட்டு (திருத்த) சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் அதனையொத்த ஏனைய இயக்கங்களைத் தடைசெய்யும் சட்டம் ஆகியவற்றில் காணப்பட்ட ஏற்பாடுகள் சிலவற்றை உள்ளீர்த்து அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது பயங்கரவாத சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருந்து.



அவ்வாறு தயாரிக்கப்பட்ட சட்டமூலமானது, பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் சம்பிரதாயங்கள் அனைத்தையும் புறமொதுக்கிய வகையில் சமர்ப்பிக்கப்பட்டது. குறிப்பாக, சட்டமூலமொன்று பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டால் அதுபற்றி அபிப்பிராயத்தினை உயர்நீதிமன்றத்திடத்தில் சபாநாயகர் கோருவது பாராளுமன்ற சம்பிரதாயங்களில் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

ஆனால், பயங்கரவாத தடைச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டபோது அவ்விதமான எந்த நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 1979 ஜூலை 19ஆம் திகதி பகல் உணவிற்குப் பின்னர், பாராளுமன்றம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதாக சபாநாயகர் அறிவித்தார்.

அப்போதைய பாராளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட் பெரேரா அன்றைய தினமே அச்சட்டமூலம் நிறைவேற்றப்படக்கூடியதாக நிலையியற்கட்டளைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென பிரேரித்தார். அதற்கு சபை அனுமதி வழங்கியது. நீதி அமைச்சர் கே.டபிள்யூ தேவநாயகம் அச்சட்டமூலத்தை அறிமுகம் செய்து உரையாற்றினார்.அதன்பின்னர் ஆளும் எதிர்க்கட்சிகளின் வாதப்பிரதிவாதங்கள் ஒப்புக்காக நடைபெற்றன. குறித்த சட்டமூல விவதத்தின்போது ஜே.ஆரின் இரும்புக்கர ஆட்சிக்கு எதிராகவும் குறித்த சட்டமூலத்தினால் ஏற்படப்போகும் விளைவுகள் மற்றும் சட்டமூலம் நிறைவேற்றப்பட முயலும் முறை தொடர்பாகவும் கடுமையான விமர்சனங்களை துணிச்சலாக முன்வைத்தவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மைத்திரிபால சேனநாயக்க.

இவர், தனது உரையின்போது, குறித்த சட்டம் இயற்றுவதற்கு முன்னதாக ஜே.ஆர்.அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களின் பணிப்பில் யாழ்.சென்ற குண்டர்கள் 11இளைஞர்களை பண்ணையில் வைத்து சித்திரவதைக்குட்படுத்தி கொலை செய்தமையைச் சுட்டிக்காட்டியதோடு, இந்த பயங்கரவாத தடைச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு பிராந்தியத்தில் ஹிட்லர் ஆட்சி நிலவும் என்று குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களில், மக்களின் அடிப்படை உரிமைகளில் ஏதாவதொன்றை பறித்துக்கொள்ள முயன்ற

ஒவ்வொரு சட்டமூலமும் தேசிய நலனில் அவசர முக்கியத்துவமிக்கதாக விபரிக்கப்பட்டு, எந்த மக்களின் வாக்குகள் அரசாங்கத்திற்கு இம் மிகப் பெரிய பெரும்பான்மை கிடைப்பதற்கு உதவியதோ, அதே பொரும்பான்மையை பயன்படுத்தி அந்த மக்களின் முதுகிற்கு பின்னால் இந்தச்சட்டமும் அவசரமாக நிறைவேற்றப்பட்டு அடிமைச்சாசனம் எழுதப்படுகின்றது" என்று எச்சரித்தார்.

அந்த வாதவிவாதங்களின் ஈற்றில் அச்சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அன்றிரவு 9.45 வரை தொடர்ந்து நடைபெற்றது. அமைச்சர் தேவநாயகம் தமது தொகுப்புரையை நிகழ்த்துவதற்கு இரவு 9.58 மணிக்கு எழுந்து நின்றார். தொடர்ந்து முன்றாம் வாசிப்பும் நடைபெற்று சட்டமூலம் எல்லா நிலைகளிலும் நிறைவேறியது.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் சட்டமூலமொன்றின் மீது வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்ததன் பின்னர் உயர்நீதிமன்றத்தினது, அல்லது எதிர்க்கட்சியனது முன்மொழிவுகளை பெற்று குழுநிலையில் வாக்கியம் வாக்கியமாக படிக்கப்பட்டு திருத்தப்பட்ட பின்னரே குறித்த சட்டமூலத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறுவது மரபாகும். இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டபோதே உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கவில்லை. அதாவது ஜனநாயகத்தின் தூண்களின் ஒன்றான நீதித்துறை நிராகரிக்கப்பட்டது. அடுத்து பாராளுமன்ற ஜனநாயகத்தின் பிரகாரம் எதிர்க்கட்சிகளின் ஆகக்குறைந்த கோரிக்கைகள் கூட உள்வாங்கப்படவில்லை.

அதன் மூலம் ஜனநாயகத்தின் ஏனைய தூண்களில் ஒன்றான நிறைவேற்றுத்துறையின் இச்சைகளை செயற்படுத்தும் 'பொம்மையாகவே' ஜனநாயகத்தின் மற்றத்தூணான சட்டவாக்கத்துறை செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்த நிலையில் குறித்த தினமன்று பயங்கரவாததடைச் சட்டத்தோடு தொடர்பில்லாத, பொது மக்கள் பாதுகாப்பு கட்;டளைச் சட்டத்தின் கீழான ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, இரவு 10.25 மணியளவில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின்னர், 1982ஆம் ஆண்டில் 10ஆம் இலக்க சட்ட மூலத்தின் மூலம் பயங்கரவாத தடைச்சட்டமானது நிரந்தரச் சட்டமாக்கப்பட்டது.
குறித்த பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டபோது எதிர்க்கட்சித்தலைவராக இருந்தவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். இவர் பயங்கரவாத தடைச்சட்டம் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்கவில்லை. இதற்கான காரணம் பற்றி இற்றைவரையில் வெளிப்படையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதில்லை.

நான்கு தசாப்தங்களாக பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக போரடிவரும், அதனை நீக்க வேண்டும் என்று கோசங்களை எழுப்பிவரும் தமிழினத்தின் 'தளபதியாக' இன்றும் போற்றப்படும் அமிர்தலிங்கம் ஏன் இந்த சட்டமூலத்தினை எதிர்த்து வாக்களிக்கவில்லை. இதுவொரு வரலாற்று முக்கியமான விடயமாகும்.

ஒரு இனம் குறித்த சட்டத்திற்கு எதிராக நான்கு தசாப்தமாக போராடிவரும் நிலையில் அந்த இனத்தின் ஆணைபெற்ற தலைமை ஏன்வாக்களிக்கவில்லை என்பது மிகவும் முக்கியமானதொரு விடயமும் கூட. உண்மையிலேயே குறித்த சட்டமூலம் தற்காலிகமாகவே கொண்டுவரப்படுகின்றது.
ஆகவே அதனை குழப்பும் வகையில் எதிர்த்து வாக்களித்தால் பாராளுமன்றத்தினை கலைத்துவிட்டு ஜனாதிபதி ஆட்சியை முன்னெடுப்பேன் என்று ஜே.ஆர்.ஜயவர்த்தன அமிர்தலிங்கத்தினை வாக்கெடுப்பிற்கு சற்று முன்னதாக எச்சரித்திருந்தார்.
அவ்வாறு பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் அமிர்தலிங்கத்தின் எதிர்க்கட்சித்தலைவர் பதவி பறிபோயிருக்கும். அதன் காரணத்தினாலேயே அன்று அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வாக்களித்திருக்கவில்லை.

இதற்கு தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் இரா.சம்பந்தன் சாட்சி. அவர்

இதயசுத்தியுடன் இதனை ஏற்றுக்கொள்வது அரசியல் தர்மம். அதனை அவர் செய்வரா? என்பது அவருக்கு ஆணை வழங்கிய மக்களுக்கும், அவருக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல. இனமொன்றின் பிரச்சினையாகும்.



இதேபோன்றுதான் 2015ஆம் ஆண்டு மைத்திரி-ரணில் கூட்டு ஆட்சிக்கு முண்டு கொடுத்த தருணத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர ஐ.நா.வின் 36ஆவது கூட்டத்தொடரில் சர்வதேசத்தின் முன்னாள் வாக்குறுதி அளித்தார். அதனைச் செயற்படுத்த அப்போது நீதி அமைச்சராக இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ முனைந்தார். அவர் பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்பதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டத்தினை வரைந்தார்.

இருப்பினும், அப்போது ரணிலின் வலது கையாகவிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்தின் குறித்த சட்டத்தினை மிக வலிமையாக்க வேண்டும் என்று தனது சகபாடியான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ணவுடன் இணைந்து மறுசீரமைப்பு செய்ய விளைந்தமையால் அதன் ஆபத்துக்கள் வெளிப்படவும் குறித்த சட்டம் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது இந்த சட்டத்தினால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட இனமாக தமிழினம் இருக்கின்றது. ஆனால் இந்த சட்டத்தினை அறிமுகப்படுத்தியதிலிருந்து தற்போது வரையில் நடைமுறையில் இருப்பதற்கு தமிழர்களே காரணமாக இருக்கின்றார்கள் என்றால் பலர் மூக்கின் மேல் கையை வைப்பார்கள்.

ஆனாலும், உண்மை அதுவே. பயங்கரவாத தடைச்சட்டத்தினை அறிமுகம் செய்தவர் அப்போதைய நீதி அமைச்சர் கே.டபிள்யூ தேவநாயகம். அவர் ஒரு தமிழர். இந்தச் சட்டத்தினை எதிர்க்காது விட்ட எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் ஒரு தமிழர். பின்னர் இந்த சட்டத்தின் கீழ் முதலாவது வழக்கினை தொடர்ந்த அப்போதைய சட்டமா அதிபர் சிவா பசுபதி ஒரு தமிழர். பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டபோதும் அதற்கு பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதும் அமைதியாக இருந்தவர் சம்பந்தன் ஒரு தமிழர். குறித்த சட்டத்தினை மாற்றி அமைப்பதற்கு முனைந்தபோது அதில் இழுபறி ஏற்படக்காரண கர்த்தாவாகியவர் சுமந்திரன் என்ற தமிழர்.

ஆக, தமிழர்களால் தான் பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதுவரையில் அமுலில் இருக்கின்றது. இதன் கோரங்களையும் தமிழனம் அனுபவித்துவிட்ட நிலையில் இனியாவது, தமிழனத்திற்கான பரிகாரமாக குறித்த சட்டமூலத்தினை நீக்க வேண்டும் என்பதில் ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம், ஐ.நா.அரங்கு உள்ளிட்ட சர்வதேச தரப்புக்கள் உறுதியாக இருக்கும் நிலையில் உள்நாட்டில் தமிழினத்தின் பிரதிநிதிகள் உறுதியான அழுத்தங்களை வழங்கி மாற்றி அமைக்க வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால், தமிழினத்துக்கு எதிரான சட்டம் நீட்சி பெறுவதற்கு அதன் பிரதிநிதிகளே காரணகர்த்தாக்கள் என்ற வரலாற்றுக்களை துடைத்தெறியப்படாது தொடர்ந்துகொண்டே இருக்கும். இனவிடுதலையில் அதுவொரு சாபக்கேடாகவே நீட்சிபெறும்.

---

# ??????????? ?????????? ???????????



நினைவுகளை திருகும் இனக்கொலை

முப்பது வருடமாக நாட்டில் இருந்த பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 12 ஆண்டுக் ஆகுவதாக ஸ்ரீலங்கா அரசின் வானொலி ஒன்று செய்தி ஒலிபரப்பிய சமயத்தில், கிளிநொச்சி நகரில் அதனைக் கேட்டுக் கொண்டிருந்த நம் மக்கள் மிகுந்த கோவமும் கொந்தளிப்பும் அடைந்ததை நேரடியாகப் பார்த்தேன். எங்கள் மண்ணில் குழந்தைகளின் தந்தை அல்லது தாயாரை பறித்துக் கொண்டனர். நிறைய தாய்மாரின் குழந்தைகளை கொலை செய்தனர். பலர் கைகளின்றி, கால்களின்றி, விரல்களின்றி, உடல் பாகங்கள் காயப்பட்டு உலவும் நகரில் இப்படியொரு செய்தி கேட்கையில் எப்படி இருக்கும்? நிச்சயமாக எங்கள் மனங்களை கொலை செய்யும் இன்கொலையாகவே இது இருக்கும்.

அந்த செய்தியில் இன்னும் சில வரிகளும் சொல்லப்பட்டன. மனிதாபிமானப் போரை செய்து சிங்களப்படைகள் பிரபாகரனின் ஈழக் கனவை வெற்றி கொண்டனராம். எங்கள் மக்கள் வகைதொகையின்றி அழிக்கப்பட்டு, அவர்களின் உறவுகள் பறிக்கப்பட்டு, இன்று வாழ்பவர்கள்கூட பகுதியளவில் அழிக்கப்பட்ட இந்த இனவழிப்புப் போருக்கு மனிதாபிமானப் போர் என்று அந்த சிங்களப் பேரினவாத அடிமை ஊடகம் கூறுகின்றது. ஈழப் பே-ாரின் இறுதிக் கணங்களை அறிந்த மனித மனம் உள்ள எவரும் இதனைக் கண்டு நிச்சயமாக கொதிப்பார்கள். இதனை தமிழில் எழுதிய அந்த ஊடகவியலா-ளர் எவ்வாறு அன்றைய இரவு உறங்கி இருப்பார்? எவ்வாறு அன்று உணவை உண்டிருப்பார்? இதெல்லாம் எத்தனை லட்சம் ஆன்மாக்களுக்கு செய்கின்ற அநீதி?

கொட்டி கருவில் இருந்த குழந்தைகளைகூட அழித்த மிகப் பயங்கரமான இனப்படு கொலை. எங்கள் இனத்தை மாத்திரமின்றி உலகின் மனசாட்சி உள்ள அத்தனை சமூகங்களையும் மிகவும் பாதித்த இனப்படுகொலையாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை கருதப்படுகின்றது.

இசைப்பிரியாவுக்கு நடந்த பாலியல் இனவேட்டை வன்முறைதான் சிங்கள அரசின் மனிதாபிமானப் போரா? அப்பாவி சிறுவனான பாலச்சந்திரன் என்ற பாலகனின் பிஞ்சு உடலில் இரும்புத் துப்பாக்கிகளை வைத்து அவனைச் சுட்டுக் கொன்றதுதான் சிங்கள அரசின் மனிதாபிமா னப் போரா? இப்படி எண்ணற்ற கொடுமை கள் நடந்ததேறின. மனித குலத்திற்கு எதிரான இந்த விடயங்களை ஈழத் தமிழ் மக்கள் மனிதாபிமானப் போர் என்ற பெயரில் எதிர்கொண்டார்கள் என்பது எத்தகைய கொடுமை? இந்தப் போரை கொண்டாடுகின்ற சிங்கள அரசு, அதில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூருகின்ற உரிமையை மறுப்பது எப்படிக் கொடுமை யானது?

இவைகளின் வழியாக இனப்படு கொலைக்கான நீதியே வலியுறுத்தப் படுகின்றது. நிச்சயமாக இவைகளுக்கு இலங்கை அரசு பதில் கொல்லி ஆக வேண்டும். இப்படி மிகப் பெரிய அநீதிகளை இழைத்துவிட்டு போர் வெற்றி விழாவைக் கொண்டாடி, தமிழர்களை நாயைப் போல

?????????????




முப்பது வருடமாக நாட்டில் இருந்த பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 12 ஆண்டுக் ஆகுவதாக ஸ்ரீலங்கா அரசின் வானொலி ஒன்று செய்தி ஒலிபரப்பிய சமயத்தில், கிளிநொச்சி நகரில் அதனைக் கேட்டுக் கொண்டிருந்த நம் மக்கள் மிகுந்த கோவமும் கொந்தளிப்பும் அடைந்ததை நேரடியாகப் பார்த்தேன். எங்கள் மண்ணில் குழந்தைகளின் தந்தை அல்லது தாயாரை பறித்துக் கொண்டனர். நிறைய தாய்மாரின் குழந்தைகளை கொலை செய்தனர். பலர் கைகளின்றி, கால்களின்றி, விரல்களின்றி, உடல் பாகங்கள் காயப்பட்டு உலவும் நகரில் இப்படியொரு செய்தி கேட்கையில் எப்படி இருக்கும்? நிச்சயமாக எங்கள் மனங்களை கொலை செய்யும் இன்கொலையாகவே இது இருக்கும்.

அந்த செய்தியில் இன்னும் சில வரிகளும் சொல்லப்பட்டன. மனிதாபிமானப் போரை செய்து சிங்களப்படைகள் பிரபாகரனின் ஈழக் கனவை வெற்றி கொண்டனராம். எங்கள் மக்கள் வகைதொகையின்றி அழிக்கப்பட்டு, அவர்களின் உறவுகள் பறிக்கப்பட்டு, இன்று வாழ்பவர்கள்கூட பகுதியளவில் அழிக்கப்பட்ட இந்த இனவழிப்புப் போருக்கு மனிதாபிமானப் போர் என்று அந்த சிங்களப் பேரினவாத அடிமை ஊடகம் கூறுகின்றது. ஈழப் போரின் இறுதிக் கணங்களை அறிந்த மனித மனம் உள்ள எவரும் இதனைக் கண்டு நிச்சயமாக கொதிப்பார்கள். இதனை தமிழில் எழுதிய அந்த ஊடகவியலாளர் எவ்வாறு அன்றைய இரவு உறங்கி இருப்பார்? எவ்வாறு அன்று உணவை உண்டிருப்பார்? இதெல்லாம் எத்தனை லட்சம் ஆன்மாக்களுக்கு செய்கின்ற அநீதி?

நாம் சட்டம் வழியாகவும் ஊடகங்கள் வழியாகவும் இப்போது திருகி இனக்கொலை செய்யப்படுகிறோம் என்பதையே இப் பத்தி வலியுறுத்த முனைகின்றது. அதற்காகவே மேற்குறித்த விடயங்களை இங்கே சுட்டிக்காட்டவும் விளைகிறேன். 2021 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது எமக்கு பல படிப்பினைகளை தந்திருக்கிறது. ஈழத்தின் இன்றைய நிலமையை மாத்திரமின்றி, இனப்படுகொலையின் நீதியை வெல்ல

வேண்டியதன் அவசியத்தையும் அது எதிர்காலத்தில் எப்படியெல்லாம் எமது இனத்தை அழிக்கப் போகின்றது என்பதையும் எமது மக்கள் புரிந்து கொள்ளுவதற்கான வெளியை முள்ளிவாய்க்கால் 2021 ஏற்படுத்தியுள்ளது.

தற்போது கொரோனா தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைத்து வருகின்றது. நாடுகள் எல்லாம் முடக்கத்தில் இருக்கின்றன. இன்று இருப்பவர்கள் நாளை இல்லை என்ற அபாய நிலை ஆட்சி செய்கிறது. கண்ணுக்குத் தெரியாத கிருமி மனித இனத்தின் இருப்பையும் ஆட்சியையும் அவனின் பேராசைகளையும் கேள்விக்கு உட்படுத்தி நிற்கின்றது. இந்தக் காலத்திலும்கூட சிங்களப் பேரினவாத்தின் வெறி அடங்கிவில்லை என்பது வியப்பதற்குரியதல்ல. அதுவும் கொரோனவை கிருமிகளை துணைக்கு அழைத்து ஈழத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கின்ற அரசின் கொடிய நோக்கத்தை என்னவென்பது?

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் ஒரு சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமை வந்திருந்தால் சிங்கள அரசுக்கு மிக மகிழச்சியாக இருந்திருக்கிருக்கும். நாட்டை முழுமையாக முடக்கிவிட்டு, கொழும்பில் போர் வெற்றி விழா கொண்டாடி இருப்பார்கள். தற்போதும் கடந்த 18ஆம் திகதி செவ்வாய் கிழமை முல்லைத்தீவை முடக்கியிருந்தது அரசு. முள்ளிவாய்க்காலில் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தி விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே முல்லைத்தீவு முடக்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை சுற்றி இராணுவம் குவிக்கப்பட்டு நினைவேந்தலை தடுக்கும் முயற்சிகளும் இடம்பெற்றன.

அது மாத்திரமின்றி வடக்கு கிழக்கு முழுவதும் கொரோனாவை காரணம் காட்டி இராணுவம் குவிக்கப்பட்டது. பீல்பைக் இராணுவ அணி கிராமங்கள் முழுதும் திரிந்து மக்களை அச்சுறுத்தும் வேலைகளில் ஈடுபட்டன. மாபெரும் இனவழிப்புப் போரை செய்த சிங்கள இராணுவத்திற்கு பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டு போர் வெற்றி விழாக்கள் முன்னெடுக்கப்பட்டு தென்னிலங்கையை மகிழச்சி வெள்ளத்தில் நனைக்க முற்பட்ட சிங்கள அரசு, வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை போரில் கொல்லப்பட்டவர்களுக்காக கண்ணீர் விடக் கூட அனுமதி மறுத்திருந்தமை மிகப் பெரிய ஒடுக்குமுறையாகும்.

முள்ளிவாய்க்கால் என்பது ஈழத் தமிழ் மக்களின் மறக்க முடியாத ஆழமான வடு. எமது மக்கள் ஒன்றரை லட்சம் மக்களை காவு கொண்ட இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இனவழிப்பு. கஞ்சிக்கு வரிசையில் காத்திருந்த குழந்தைகளை சிங்கள அரசு அழித்தது. மருத்துமனைகளின் மீதும் அப்பாவி மக்களின் கூடாரங்களின்மீதும் பதுங்குகுழிகளின்மீதும் குண்டுகளை கொட்டி கருவில் இருந்த குழந்தைகளைகூட அழித்த மிகப் பயங்கரமான இனப்படுகொலை. எங்கள் இனத்தை மாத்திரமின்றி உலகின் மனசாட்சி உள்ள அத்தனை சமூகங்களையும் மிகவும் பாதித்த இனப்படுகொலையாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை கருதப்படுகின்றது.

இசைப்பிரியாவுக்கு நடந்த பாலியல் இனவேட்டை வன்முறைதான் சிங்கள அரசின் மனிதாபிமானப் போரா? அப்பாவி சிறுவனான பாலச்சந்திரன் என்ற பாலகனின் பிஞ்சு உடலில் இரும்புத் துப்பாக்கிகளை வைத்து அவனைச் சுட்டுக் கொன்றதுதான் சிங்கள அரசின் மனிதாபிமானப் போரா? இப்படி எண்ணற்ற கொடுமைகள் நடந்ததேறின. மனித குலத்திற்கு எதிரான இந்த விடயங்களை ஈழத் தமிழ் மக்கள் மனிதாபிமானப் போர் என்ற பெயரில் எதிர்கொண்டார்கள் என்பது எத்தகைய கொடுமை? இந்தப் போரை கொண்டாடுகின்ற சிங்கள அரசு, அதில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூருகின்ற உரிமையை மறுப்பது எப்படிக் கொடுமையானது?

இவைகளின் வழியாக இனப்படுகொலைக்கான நீதியே வலியுறுத்தப்படுகின்றது. நிச்சயமாக இவைகளுக்கு இலங்கை அரசு பதில் கொல்லி ஆக வேண்டும். இப்படி மிகப் பெரிய அநீதிகளை இழைத்துவிட்டு போர் வெற்றி விழாவைக் கொண்டாடி, தமிழர்களை நாயைப் போல சுட்டேன் என மார்தட்டிவிட்டு, உலகத்திற்கு மனிதாபிமான வகுப்பு எடுப்பது இந்த உலகிற்கு நல்லதல்ல. அது மிகப் பெரிய ஆபத்தை தரும். இனியும் இந்த உலகப் பந்தில் இப்படியான கொடுமைகள் நடக்க கூடாது என்பதுதானே ஈழத் தமிழ் மக்களின் பெரும் ஏக்கமாக இருக்கிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி, சிங்களப் பேரினவாத அரசின் நினைவுகள்மீதான இனக்கொலை தெளிவாக தென்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம், இனப்படுகொலைக்கான நீதியே ஈழத் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பாகவும் அவர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும், ஈழத் தமிழ் இனத்திற்கான பாதுகாப்பாகவும் இருக்கும். அத்துடன் அதுவே நினைவேந்தல் உரிமையையுக்கூட உறுதி செய்யும். இனப்படுகொலைக் காயங்களிலிருந்து விடுபட்டு, மீள் வாழ்க்கையை கட்டியெழுப்ப இனப்படுகொலைக்கான நீதியும் நினைவேந்தல் உரிமையுமே ஈழத் தமிழினத்திற்கான ஒத்தடம் ஆகும்.

---

# ????????? ??????????????? ???????? ???? ??????????






**?.?????????**

உள்நாட்டில எமக்கு நீதி கிடைக்குமென்ட நம்பிக்கை எனக்கில்ல, 10 வருடமா இவையல் எதையும் செய்யில்ல, சர்வதேசம் தான் எமக்கொரு தீர்வத்தரோனும். நாங்க கடவுளுக்கு பிறகு நம்பிறது சர்வதேசத்தத்தான்" என்கிறார் நல்லூரைச் சேர்ந்த முருகேசு.

இலங்கையின் தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னரான காலத்தில் அடிக்கடிக் கேட்கக்கூடிய வசனங்களில் ஒன்று "சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்த வேண்டும்" என்பதாகும்.

இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தில் அரச படையினர் இழைத்ததாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு, உள்ளூர் பொறிமுறைகள் மற்றும் சர்வதேச ரீதியாக பரிந்துரைக்கப்படும் பொறிமுறைகள் ஊடாக நியாயத்தை பெற்றுக்கொள்ள முடியாது என வலியுறுத்தும் ஒரு சிலத் தமிழ் அரசியல் தலைமைகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை படையினரை நிறுத்தி தண்டனைப் பெற்றுக்கொடுக்கலாம் என்ற வாதத்தை முன்வைத்து வருகின்றனர்.

"ஏதோ சொல்லினம், ஆனால் என்னென்றுத் தெரியில்ல, குற்றவியல் நீதிமன்றம், சர்வதேசம் எல்லாம் வெட்டிப் பேச்சு" என்கிறார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராசா ஜெகந்தன். "பேசிப் பேசியே பத்து வருஷம் முடிஞ்சுது, பாப்பம் என்ன செய்யபோயினமெண்டு, எனக்கென்றால் இது சரிவருமா என்ற சந்தேகம் இருக்கு, இது இடியப்பச் சிக்கலப்பா" என்கிர் முல்லைத்தீவைச் சேர்ந்த சிவநேசன் யசீகரன்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court), சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றங்களாக வரையறுக்கக்கூடிய, இனப்படுகொலை, மனிதர்களுக்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவென 2002இல் உருவாக்கப்பட்டது.

1998இல் ரோம் மாநாட்டில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்குவதற்கான ரோம் சாசனம்

உருவானது. அதற்கான வாக்கெடுப்பில் 120 நாடுகள் ஆதரவாகவும் அமெரிக்கா, இஸ்ரேல், சீனா, ஈராக், லிபியா, யேமன் மற்றும் கட்டார் ஆகிய ஏழு நாடுகள் எதிராகவும் வாக்களித்தன.

21 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பிரதான வழக்குத் தொடுநர் ஒருவர் காணப்படுவார். எவ்வாறெனினும், பாரதூரமான குற்றங்கள் நிகழ்ந்தமைக்கான போதிய ஆதாரங்கள் இருப்பதையும், அவற்றை விசாரணை செய்யும் அதிகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இருப்பதையும் அவர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உண்மையில் இலங்கையானது, ரோம் சட்டத்தை அதாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை உள்ளூர் சட்டத்தில் இணைக்காத நிலையில், இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் இழைக்கப்பட்ட குற்றங்களை நேரடியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை செய்வது சாத்தியமா? என்ற மிகப்பெரிய கேள்வி எம்முன்னே எழுகின்றது.

எனினும் இந்த இடத்தில்தான் தமிழ்த் தேசியம் பேசக்கூடிய கட்சிகளில் ஒன்றாகவும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பில் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கட்சியுமான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மியன்மார் விடயத்தை முன்னுதாரணமாகக் கொண்டு இந்த செயற்பாட்டை முன்னெடுக்க முடியுமென வாதிடுகிறது.

மியன்மார் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக்கொண்ட ஒரு நாடு அல்ல, ஆனால், மியன்மார் நாட்டின் ரோஹிங்கியா முஸ்லிம்கள் இலட்சக் கணக்கில் பங்களாதேஷில் அகதிகளாகக் குடியேறியுள்ளனர்.

பங்களாதேஷ் ரோம் சட்டத்தை தன் நாட்டுச் சட்டத்தில் இணைத்த நாடு. ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுடன் பங்களாதேஷ் தொடர்புபட்டிருப்பதால், அந்த அடிப்படையில் மியன்மார் விடயத்தை கையில் எடுக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே ”ரோம் சாசனத்தில் இலங்கை அரசாங்கம் கையெழுத்திடாவிட்டாலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளில் குடியேறியுள்ளார்கள்.

ஆகவே அந்த மக்கள் ஊடாக இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுச் செல்லலாம், இதன் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.” என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவிக்கின்றார்.

எவ்வாறெனினும், மியன்மார் விடயத்தைப்போன்று இலங்கை விடயத்தை கையாள முடியாது என்கிறார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான எம்.ஏ சுமந்திரன்.

”மியன்மார் விடயத்தில் ஐக்கிய நாடுள் மனித உரிமைகள் பேரவையே அந்தப் பொறிமுறையை உருவாக்கியுள்ளது. நாம் இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தினை மனித உரிமைகள் பேரவையிலிருந்து விடுவிப்பதற்கான கோரிக்கையை முதலில் விடுத்துவிட்டு பின்னர் அதே ஆவணத்தில் மனித உரிமை பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட பொறிமுறையை கோருவதானது முன்னுக்குப்பின் முரண்பாடாக இருக்கும் என்பதால் அந்த பொறிமுறை சாத்தியமில்லை” என்பதாக அவரது கருத்து அமைந்துள்ளது.

அவ்வாறு இடம்பெறாவிடின், அடுத்ததாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான வழி ஐக்கிய நாடுகள் பொதுச் சபை. இதற்கான சாத்தியங்களும் அரிது என்பதே பலரது வாதம். ”மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையிடம் கையளிக்கப்பட வேண்டும்.

பொதுச் சபையானது அதனை பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்து இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனைவிட சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்படாமல் இருக்க வேண்டும்" என்கிறார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன். "பாதுகாப்புச் சபையின் ஊடாக செல்வதே எமக்குள்ள ஒரேவழியாகும்.

ஆனால் இதில் இரத்து அதிகாரத்தினைக் கொண்டுள்ள ரஷ்யா, சீனா இலங்கையை காப்பாற்றும் என்பதே எனது தர்க்கமாகும்." என்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.ஏ சுமந்திரன். பாதுகாப்புச் சபையில் இரத்து அதிகாரத்தைக் கொண்டுள்ள சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தொடர்பிலான இந்த இருவரின் கருத்திலும் காணப்படும் யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சீனாவும், ரஷ்யாவும் இலங்கையுடன் எத்தகைய உறவைப் பேணுகிறது என்பது இலங்கையில் உள்ள சிறு பிள்ளைக்கும் தெரியும். அதனைவிட தமிழர்கள் அதிகமாக வாழும் நாடுகள் ஐரோப்பிய வலய நாடுகளே, அந்த நாடுகளின் ஒத்துழைப்புடன் இடம்பெறும் விசாரணைகளுக்கு நிச்சியமாக ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் இணக்கத் தெரிவிக்கப்போவது இல்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குறிப்பிடுவதுபோல் இந்த விசாரணைக்கான ஆரம்ப செயற்பாடுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆரம்பிக்குமென வைத்துக்கொள்வோம், எத்தனை நாடுகள் ஒத்துழைப்பு வழங்கும் என்ற கேள்வி எழுகின்றது.

அவ்வாறு ஏதோ சில நாடுகள் ஒத்துழைப்பு வழங்கி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டாலும், இலங்கையில் இழைக்கப்பட்டடதாகக் கூறப்படும் குற்றங்களுக்கான ஆதாரங்களைத் திரட்டி, சந்தேகநபர்களை அடையாளம் காணவேண்டும்.

இந்த இடத்தில் மற்றுமொரு விடயத்தை அவதானிக்க வேண்டும், அதாவது இலங்கை இராணுவத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு வலியுறுத்தும் கோரிக்கையை பிரித்தானியா கடந்த மார்ச் மாதமளவில் நிராகரித்திருந்தது.



ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் கையெழுத்திட்டு விடுத்த வேண்டுகோளுக்கு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் போதிய ஆதரவில்லை எனத் தெரிவித்து பிரித்தானியா இதனை நிராகரித்தது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறுக் கோரி 13,500ற்கும் மேற்பட்ட கையொப்பங்களுடன் அனுப்பட்ட கடிதத்திற்கு பிரித்தானிய அரசு அளித்த பதிலில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவிய ரோம் சட்டத்தில் இலங்கை கையொப்பமிடவில்லை எனவும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஊடாக மாத்திரமே குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையை பரிந்துரைக்க முடியும் எனவும் பிரித்தானிய அரசு தெரிவித்திருந்தது.

அத்தகைய பரிந்துரையை இரத்து அதிகாரம் உள்ள நாடுகள் நிராகரிக்கலாம் என பிரித்தானியா தெரிவித்திருந்த விடயத்தை ஞாபகப்படுத்துவது பொறுத்தமாக இருக்கும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தனிநபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியுமேத் தவிர ஒரு அரசின் மீதல்ல, யுத்தக் குற்றங்களில் அரசு ஈடுபடவில்லை, மாறாக அரசின் அறிவுறுத்தலில் தனிநபர்களே ஈடுபட்டார்கள் என வாதிட்டாலும், அந்த நபர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்த இலங்கையின் அனுமதி அவசியம்.

சாட்சிகளைத் திரட்ட விசாரணையாளர்கள் இலங்கைக்கு வருவதற்கு இலங்கை அரசு அனுமதியளிக்க வேண்டும். இது எந்த வகையில் சாத்தியம் என்ற கேள்வி எழுகிறது. ”ஐ.நா செயலாளர் நாயகத்தின் மூன்று பேர் கொண்ட குழுவின் அறிக்கை, அதன் பின்னரான இரண்டு அறிக்கைகள் என மொத்தம் மூன்று அறிக்கைகள் இலங்கையில் குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டதாலேயே 2012ஆம் ஆண்டு ஐ.நா செயலாளர் நாயகம், நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பித்தார். குற்றங்கள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் அறிக்கைகளிலேயே காணப்படுகின்றது.

2014ஆம் ஆண்டு பல மாதங்களாக இலங்கையில் சாட்சியங்களை திரட்டியுள்ளது. ஆகவே அந்த சாட்சியங்களையும் வழக்கும் தொடருநர்கள் பயன்படுத்த முடியும், சாட்சியமளிக்க பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் தயாராக இருக்கின்றனர்” என செல்வராசா கஜேந்திரன் தெரிவிக்கின்றார்.

”சாட்சிகளைத் சேகரித்த பின்னர் சந்தேகநபர் யார் என்பதை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இனங்கண்டு அவருக்கு அழைப்பாணை பிறப்பிக்கும், சந்தேகநபர் தாமாக வழக்கில் முன்னிலையாகலாம், அவ்வாறு இடம்பெறாத பட்சத்தில், நபருக்கு எதிராக சர்வதேச பிடியாணை உத்தரவைப் பிறப்பிக்க முடியும். சந்தேகநபரது நாடு அல்லது அவர் பயணிக்கும் மற்றொரு நாடு அவரைப் கைது செய்து ஒப்படைத்தால் மாத்திரமே வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்கிறார்” சட்டத்தரணி நவநீதன்.

”இந்த விடயம் ஒரு கட்டத்தை கடந்த பின்னர் இடம்பெறும் விடயங்களே இவை. ஆனால் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக விசாரணைக்கே வாய்ப்பில்லை என இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஏனென்றால் மனித உரிமைகள் பேரவையின் அதிகாரங்களுக்கு உட்பட்டு இலங்கை அரசாங்கமே அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய வேண்டும். வேறு எந்த வகையிலும் அந்த பேரவை அதிகாரம் செலுத்த முடியாது.

ஆனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் சாட்சிகளை திரட்டி விசாரணைகளை முன்னெடுத்துச் கணிசமாக முன்னோக்கிச் செல்ல முடியும். ஆகவே இதனை சாதகமான விடயமாகவே பார்க்க வேண்டும். பூகோள அரசியல்

சூழ்நிலைக்கு அமைய, இந்தியா சிலவேளைகளில் இலங்கைக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.” என்பதே செல்வராசா கஜேந்திரனின் கருத்து.

எனினும் இந்த விடயம் சாத்தியமில்லை என்பதோடு ஒருவித மிகைப்படுத்தப்பட்ட நம்பிக்கையை மாத்திரம் வைத்துக்கொண்டு என்ன செய்துவிட முடியும் என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

இந்த விடயங்கள் சாத்தியமில்லை என்றால், மூன்றாவதாக இலங்கை தாமாக முன்வந்து குற்றவியல் நீதிமன்றப் பொறிமுறைக்கு முகங்கொடுக்க வேண்டும். இலங்கை அவ்விதமாக செயற்படப்போவது இல்லை என்பதே யதார்த்தம்.

இதுத் தொடர்பில் எவ்வித சந்தேகமும் ஏற்பட வாய்ப்பில்லை. ”அன்று போருக்கு சென்ற எவரும் இனப்படுகொலை நிகழ்த்துவதற்காக அங்கு செல்லவில்லை. இராணுவத்தினருக்கு எதிராக ஜெனீவா மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் இணை அனுசரணையாளர் என்ற துரோக தீர்மானத்திலிருந்து நாங்கள் விலகினோம்.”

இது பிரதமர் மஹிந்த ராஜபக்ச யுத்த வெற்றி தினத்தை முன்னிட்டு, 2021 மே 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி. இந்த உரை எமக்கு பல உண்மைகளை உணர்த்தும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை!

மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையே நிராகரித்து அதிலிருந்து வெளியேறுவதாக பகிரங்கமாக அறிவித்துள்ள இலங்கை அரசாங்கம், எங்கள் பிரச்சினையை நாங்களே பார்த்துக்கொள்வோம் என அறிவித்துள்ளது.

மேலும் இலங்கை பாதுகாப்புப் படையினர் எவ்வித குற்றங்களையும் இழைக்கவில்லை எனவும், மனிதாபிமான நடவடிக்கைகளையே முன்னெடுத்ததாகவும் அறிவித்துள்ளது. இவ்வாறு அறிவித்து இலங்கை அரசு எந்த வகையிலும் இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைக்காது என்பதே யதார்த்தம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், கனடாவின் ஒன்ராறியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலத்தினால் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் தமிழின அழிப்பு தொடர்பாக கொண்டுவரப்பட்ட ”அறிவியற் கிழமை” சட்டமூலம் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாண சட்ட மன்றம் தமிழ் இனப்படுகொலைக் கல்வி வாரம் சட்டத்தை ஏகமனதாக அங்கீகரித்தும் இருக்கின்றது. இலங்கையில் ஒரு இனவழிப்பு நடைபெற்றுள்ளதென்பதை அங்கீகரிப்பதாக அந்த சட்டம் குறிப்பிடுகின்றது.



புலம்பெயர் தமிழர்கள் அதிகமாக வாழும் (சுமார் மூன்றரை இலட்சம்) நாடுகளில் ஒன்றான கனடாவின், ஒரு பிராந்தியத்தில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளபோதிலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்தும் விடயத்தில் இது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தப்போவது இல்லையென, சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ் இரத்தினவேல் தெரிவிக்கின்றார்.

"தமிழ் இனப்படுகொலைக் கல்வி வாரம்" ஒரு கல்வி ரீதியான விடயமாக அமையுமேத் தவிர வேறு விடயங்களில் தாக்கம் செலுத்தப்போவது இல்லை. இலங்கையின் வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தீர்மானமானது, ஒரு நாட்டு அரசாங்கத்திற்கு எதிராக அந்த நாட்டு மக்களாலேயே கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஆகவே இது சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனினும் கனடாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அவ்வளவு வலுவானதல்ல என சட்டத்தரணி இரத்தினவேல் தெரிவிக்கின்றார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தன்னுடைய இரண்டு தசாப்தங்களுக்கு மேலான வரலாற்றில், அஹமட் அல் பகி அல் மஹாடி (மாலி – 2018), ஜேர்மெயின் கடாங்கா (கொங்கோ குடியரசு – 2014) தோமஸ் லுபாங்கா (கொங்கோ குடியரசு – 2012) ஆகிய மூன்று பேரை மாத்திரமே குற்றவாளிகளாக அடையாளம் கண்டிருந்தது.

காரணம், அதிகார வரம்பு, மட்டுப்பாடுகள், சாட்சியங்களைத் திரட்டும் இயலுமை, வழக்குத் தொடர்வதற்கான படிமுறைகள், விசாரணைகளின் தன்மை உள்ளிட்ட பல விடயங்களின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு சில வரையறைகள் காணப்படுகின்றன.

தார்பூர் பிரச்சினை, வடக்கு உகாண்டா விடயம், கொங்கோ குடியரசின் கிழக்கு பிரச்சினை, மற்றும் மத்திய

ஆபிரிக்கக் குடியரசின் பிரச்சினை ஆகிய விடயங்களில் ஓரளவு முன்னேற்றகரமான படிகளைத் தாண்டியிருந்தாலும், அதற்கு எடுத்துக்கொண்ட காலம் மிக நீண்டது.

இந்த விடயங்களை அடிப்படையாக் கொண்டு ஆராய்கையில், தமிழர் விடயத்தில், இலங்கையை அவ்வளவு இலகுவாக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்திவிட முடியாது. அதற்கான செயற்பாடுகள் மிக நுணுக்கமாகவும், அவதானமாகவும் கையாளப்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டாலும், அதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

அதனைவிட அதற்கு சர்வதேசத்தின் மிகப்பெரிய ஒத்துழைப்பு அவசியம். மாறுபடுகின்ற பூகோள அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்தந்த நாடுகள் தமது பிரச்சினைகள் தொடர்பில் கரிசனைகொள்ளுமேத் தவிர, ஒரு சிறு இனக்குழுவிற்காக செயற்படுமா என்பது சந்தேகமே.

இவ்வாறான சூழ்நிலையில், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களையும், ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகளையும் மாத்திரம் வைத்துக்கொண்டு யுத்தக் குற்றங்கள் அல்லது இனப்படுகொலை இலங்கையில் இடம்பெற்றதாக நிரூபிக்க முடியுமென நம்புவது யதார்த்தத்துடன் ஒப்பிடும் போது சாத்தியமில்லாத ஒன்று என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக அமைந்துள்ளது.

---

# ???????????? ??????????????? ?????????????? ??????



**-??????-**



தாயக, தேசிய சுயநிர்ணய உரிமைகளுக்காக எழுபது ஆண்டுகளாக பேராடி வருகின்றது தமிழினம். இந்த உரிமைகளுக்காக தமது இன்னுயிர்களை மண்ணுயிர்களாக்கியவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதவை.

விடுதலை என்னும் வேள்வித் தீயில் தம்முயிர்களை ஈகம் செய்தவர்கள் ஏக்கம் இன்னும் தொடர்கதையாகவே உள்ளது. குறிப்பாக, விடுதலை பயணத்தின் அதியுச்சமாக முள்ளிவாய்க்காலில் தம்முயிர்களை ஈகம் செய்தவர்கள் இலட்சக்கணக்கானவர்கள்.
ராஜபக்ஷ சகோதரர்களினுடைய அரசாங்கத்தின் போலிப் பிரசாரத்தில் மயங்கிய சர்வதேசம் கூட்டிணைந்து முள்ளிவாய்க்காலில் இந்த நூற்றாண்டின் மாபெரும் மனிதப் பேரவலத்தினை நிகழ்த்தியது.

பச்சிளம் குழந்தைகள் முதல், பல்வேறுபாடுகளின்றி அந்த மண்ணில் மரணிக்கச் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை ஆயிரமாயிரம். மனிதாபிமான நடவடிக்கை என்ற முலாமிடப்பட்ட திட்டத்தில் மனிதப் பேரவலத்தினை நடத்தின இலங்கைப் படைகள்.
மிலேச்சத்தனமான தமது நடவடிக்கைகளை மறைத்து, உயிரிழந்த அனைவரும், பங்கரவாதிகள் என்று உலகிற்கு சித்தரித்து மனிதஉரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் ஆகியவை மீறப்பட்டதை தற்போது வரையில் மறுதலித்து வருகின்றன இலங்கைப் படைகள்.
மறுபக்கம், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகோரி தசாப்தம் கடந்தும் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கின்றன பாதிக்கப்பட்ட தரப்பாக தற்போது இருக்கும் தமிழினம்.
இந்தப் பின்னணியில் எதிர்வரும் மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்த்தப்பட்டு 12ஆவது வருடங்களாகின்றன. இந்தநாளில், மனித பேரவலம் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் முற்றத்தில் ஆஃகுதியாகிய அனைத்து உயிர்களுக்குமான நினைவேந்தலைச் செய்வது வழமையாகும்.

2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இந்த தற்போதைய ராஜபக்ஷ சகோதரர்களின் அரசாங்கமானது, கொரோனா கொள்ளை நோயைப் பயன்படுத்தி கடந்த ஆண்டு நினைவேந்தல் நிகழ்வினை தடுத்து நிறுத்தியது.

கட்டுப்பாடுகளை உடைத்து நினைவேந்தல் உரிமைக்காக போரடியவர்கள் மீது பொலிஸாரைப் பயன்படுத்தி திட்டமிட்ட வழக்குகளை தொடுத்தது அரசு. இன்னும் பலருக்கு எதிராக பொலிஸார் முன்கூட்டியே நீதிமன்ற தடை உத்தரவுகளைப் பெற்றும் இருந்தார்கள்

எனினும், தமிழர் தாயகத்தில் தடைகளை உடைத்து நினைவேந்தல் நிகழ்வுகள் ஆங்காங்கே நடைபெற்றன. அந்த நினைவேந்தலில் கூட தமிழ்த் தரப்பின் பாகப்பிரிவினைகள் வேறு இடம்பெற்றிருந்தமை துன்பகரமான விடயமே.

இந்த நிலையில் இம்முறை நினைவேந்தலைத் தடுப்பதற்கு ராஜபக்ஷவினரின் அரசாங்கம் சுமார் ஒருமாதத்திற்கு முன்னதாகவே தனது கைங்கரியங்களை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டது.
போர் நிறைவுக்கு வந்ததாக அப்போது ஆட்சியில் இருந்த ராஜபக்ஷவினரின் அரசாங்கம் அறிவித்த நாளிலிருந்து தற்போது வரையில் ஒன்றரை இலட்சம் படைகள் தமிழர் தாயகத்தில் தங்கியிருக்கின்றன.

இதனைவிடவும், முப்படைகளின் புலனாய்வாளர்கள், தேசிய புலனாய்வாளர்கள், பங்கரவாத தடுப்பு பிரிவினர், பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.
இவ்வளவு படைபலத்தையும் தமிழர் தயாகத்தில் நிறுத்தி கிட்டத்தட்ட போர்க்கள பூமிபோன்று இன்று வரையில் வைத்திருக்கும் அரசாங்கம் தற்போது ~புலி பூச்சாண்டிகளை| காண்பிக்க ஆரம்பித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்ய முனைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நால்வரையும், முல்லைத்தீவில் அதே குற்றச்சாட்டில் முன்னாள் போராளியையும் பொலிஸார் கைது செய்தனர்.

இதனைவிடவும், வடக்குகிழக்கில் உள்ள, இளைஞர் யுவதிகள், சமுகச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமுகத்தினர் ஆகியோர் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.
அனைவரினதும், முகநூல்கள், சமூக ஊடகங்கள் அனைத்தும் கடுமையான கண்காணிப்புக்குள் உட்படுத்தப்பட்டுள்ளன. இதில் தமது அன்புக்குரியவர்களுக்காக போராடும் உறவுகளுக்கு வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றதாக இடம்பெற்றிருந்தாலும் இவை அனைத்தினதும் இலக்கு ஒன்று தான். அதாவது, வடக்கிலும், கிழக்கிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீள் உருவாகுகின்றார்கள் என்று கூறி தேசிய பாதுகாப்பை வலுவாக்குகின்றோம் என்ற அடிப்படையில் ஒன்று கூடல்களை தவிர்த்து விடுதல் அல்லது தடுத்து விடுதல் என்பதாகும்.

அதாவது, தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையை முழுமையாக மறுதலித்து அவர்களை அன்புக்குரியவர்களுக்காக ஒரு துளி கண்ணீர் கூட சிந்துவதற்கு இடமளிக்காது முழுமையான அடக்குமுறைக்குள் வைத்திருத்தலே ராஜபக்ஷ சகோதரர்களினுடைய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நிலைப்பாடும் இலக்குமாகும்.

ஏற்கனவே இந்திய படைகள் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி அஹிம்சைப் போராட்டம் நடத்தி ஆஃகுதியான அன்னை பூபதியின் 33ஆவது நினைவேந்தலைக் கூட நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அதுமட்டுமன்றி, அன்னை பூபதியின் புதல்வி அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார். அவரை சுற்றி கண்காணிப்பு நடவடிக்கைள் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளே ராஜபக்ஷ சகோதரர்களின் மனோநிலையை அப்பட்டமாக வெளிப்படுத்திவிட்டது.

இதனைவிடவும், போர்க்குற்றச்சட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளவரும், இலங்கை இராணுவத்தின் தளபதியுமாக இருப்பவருமான ஜெனரல் சவேந்திர சில்வா கொரோனா தடுப்பு தேசிய செயலணியின் தலைவராகவும் இருக்கின்றார்.

இவர் நினைவேந்தல் நாளுக்கு சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னதாக ஊடகங்கள் வாயிலாக கருத்தொன்றை

பிரஸ்தாபிக்கின்றார். அதாவது, ~அடுத்து வரும் மூன்று வாரங்கள் மிகவும் ஆபத்தானவை. அந்த நாட்கள் சிக்கலானவையாக இருக்கும். ஆகவே கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்| என்பதே அவருடைய கருத்தாகும்.
இந்தக் கருத்துக்கள் வெறுமனே பொதுமக்கள் மீதான அக்கறையின் பால் வெளிப்படுத்தப்பட்டதன்று. இதன் பின்னணியில் நினைவேந்தலில் தமிழ் மக்கள் ஒன்று கூடுவதை சட்ட ரீதியாக தடுத்துவிடும் இலக்கே காணப்படுகின்றது.

அதற்கவே முற்கூட்டியே ~நல்லபிள்ளையாக| உலகிற்கு காண்பிக்கும் செயற்றிட்டத்தை படைகளைப் பயன்படுத்தி கொரோனாவின் பெயரால் அரங்கேற்ற ஆரம்பித்து விட்டது ராஜபக்ஷவினரின் அரசாங்கம். நினைவேந்தல் என்பது அடிப்படை உரிமை, தமிழர்களைப் பொறுத்தவரையில் அது கலாசார, மரபியல் ரீதியான உரிமையும் கூட. அத்தகைய உரிமையைப் பறித்தலென்பது திட்டமிட்ட மனித உரிமை மீறலாகும்.

மேலும், தற்போது ஆட்சியில் உள்ள ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சிக்காலத்திலேயே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான தமிழினத்தின் தன்னெழுச்சியான பெரும் பேரணி தடைகளை உடைத்து வீறுகொண்டு எழுந்து வெற்றி பெற்றது.

தமிழினத்தின் உரிமைக்கான எழுச்சிக்கு பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணி மிகக் கிட்டிய உதாரணம் என்பதை ராஜபக்ஷ சகோதரர்கள் நிச்சயம் புரிந்திருப்பார்கள்.
எனவே, மீண்டும் அவ்விதமானதொரு உரிமைக்கான எழுச்சியை தடைசெய்வதற்கு அதியுச்சமாக நடவடிக்கைகளை முற்கூட்டியே எடுப்பார்கள். ஆனால் அத்தனை தடைகளையும் கடந்து, தமிழினம் தன் உரிமைகளை வென்றிட பேதங்களை மறந்து அணிதிரள்வதே தற்போதைய தேவை.
தற்போதைக்கு முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு கொரோனா சுகாதார விதிகளை பின்பற்றி நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பதற்கான அறிவித்தலை விடுத்துள்ளது.

இந்த அறிவிப்பின் பின்னால் அனைத்து உறவுகளும் அணி திரண்டால் அடக்கு முறையை அமுலாக்க முனையும் அரசாங்கத்தின் திட்டம் கானல் நீராகும் என்பது திண்ணம்.

---

# ?????????????????????? ?????????? ??? ‘???? ???’





**??????**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஆரம்பித்து மார்ச் மாதம் 19ஆம் திகதி நிறைவுக்கு வரவுள்ளது. இந்த அமர்வின்போது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்சல் பச்லெட் சிறிலங்கா பற்றிய பூரண மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஆட்சிப்பீடமேறிய ராஜபக்ஷ சகோதரர்களின் அரசாங்கமானது 2020ஆண்டு நடைபெற்ற 44ஆவது மார்ச் மாதக் கூட்டத்தொடரிலேயே தாம் ஜெனிவா தீர்மானத்தினை ஆதரிக்க முடியாது என்று கூறிவிட்டது.

அதுமட்டுமன்றி ஜெனிவா தீர்மானத்திலிருந்து முழுமையாக வெளியேறப்போவதாகவும் அறிவித்தும் விட்டது. தீர்மானத்தில் உள்ள விடயங்கள் நாட்டின் 'இறைமைக்கு' எதிராக இருப்பது என்பது தான் ராஜபக்ஷ சகோதரர்களினுடைய அரசாங்கத்தின் வாதமாகவுள்ளது.

இந்த நிலைமையில், 2015ஆம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் ஐ.நா.மனித உரிமைப் பேரவை 'இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் ஊக்குவித்தல்' என்பதை உள்ளடக்கி 30.1தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் 30.1தீர்மானத்தினை முழுமையாக நடைபெறுவதை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட 2017 மார்ச்சில் 34.1 தீர்மானமும் 2019 மார்ச்சில் 40.1 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் இவற்றை ராஜபக்ஷவினர் கருத்தில் கொள்ளப்போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது.

மேற்படி 30.1 உட்பட அதனை நடைமுறைப்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், சிறிலங்காவில் நடைபெற்ற இனப்படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்டமீறல்கள், போர்க்குற்றங்கள் ஆகிய விடயங்களுக்கான நீதி கோரலை மலினப்படுத்துவதாக இருக்கின்றது என்ற விமர்சனங்களை வெகுவாகவே கொண்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட தரப்பாகவும், நீதியை எதிர்பார்க்கும் தரப்பாகவும் இருக்கும் தமிழ் மக்களின் அதிகளவு ஆணைபெற்ற பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015இல் ஆட்சிப்பீடமேறிய 'மைத்திரி-ரணில்' கூட்டு அரசாங்கத்துடன் கொண்டிருந்த 'ஊடல்' ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மலினப்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

அக்காலத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினரே நேரடியாக சாட்சியங்களையும், பகிரங்க கோரிக்கைகளையும் விடுத்தபோதும், சர்வதேச அரங்கும் செவிசாய்திருக்காத துரதிஷ்டமான நிலைமையும் காணப்பட்டது. காரணம், சிறிலங்காவின் அரசியணையில் இருந்த, அரசாங்கம், சர்வதேச சக்திகளின் நலன்களை பூர்த்தி செய்வதாக இருந்தமையாலே அவ்விதமான நிலைமை காணப்பட்டது.

ஆனால், 2019இற்கு பின்னர் மீண்டும் ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சியை கைப்பறினார்கள். இம்முறை மூன்றிலிரண்டு பெரும்பன்மை பலம் வேறு கிடைத்திருந்தது. தனிச்சிங்கள, பௌத்த வாங்கு வங்கியால் ஆட்சியையும் அமைத்திருந்தார்கள். இந்தப் பின்னணியில் ராஜபக்ஷவினரின் பிரதிபலிப்புக்கள் கடந்த ஆட்சியை விடவும் ஒருபடி மேலாகவே இருந்தது.

ராஜபக்ஷவினரின் 'சீனாவை மையங்கொண்ட எடுத்தெறிந்த எகத்தாளப் போக்கு' இயல்பாகவே அமெரிக்கா, கனடா உள்ளிட்ட மேற்குலகத்துடன் பகைமையை தோற்றுவித்தது. தனது தேச நலன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது என்ற பதற்றம் இந்தியாவுக்கும் ஏற்பட்டது.

ஆகவே, இந்தியா, தனது மேற்குலக நண்பர்களான அமெரிக்கா உள்ளிட்டவர்களுடன் கைகோர்த்து ராஜபக்ஷவினருக்கு 'கடிவாளம்' இடும் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றது.
இவ்வாறு பூகோள அரசியல் மாறுபட்டமையானது தாயக, புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்தவரையில் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், உரிமை மீறல்கள் என்று அனைத்துக்கும் நேரடியாக 'பொறுப்புக்கூற வேண்டியவர்கள்' ராஜபக்ஷவினரை 'பொறிக்குள்' கொண்டுவருவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே பார்கின்றனர்.

ஆகவே ஐ.நா.அரங்கில் ராஜபக்ஷவினரை பதிலளிக்கச் செய்யவைப்பதிலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அல்லது விசேட தீர்ப்பாயத்தில் நிறுத்துவதற்கும் பகிரதப்பிரயத்தனத்தினை எடுத்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் நடைபெற்று நிறைவடைந்த பாராளுமன்ற தேர்தலில் மும்முனையில் களமிறங்கியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று தரப்புக்களும் பிரதிநிதித்துவங்களைப் பெற்றிருக்கின்றன.

இந்த மூன்று தரப்புக்களும் இப்போது தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறலை ராஜபக்ஷவினரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் தீவிரமாகவே உள்ளன. அதற்காக அடுத்த ஜெனிவா அமர்வை மையப்படுத்தி தனித்தனியாக செயற்படவும் ஆரம்பித்திருந்தன.

இருப்பினும், இம்மூன்று தரப்பிற்குள்ளும் காணப்படும் சிறுசிறு வேறுபாடுகள், தனிநபர் முரண்பாடுகளால் ஒட்டுமொத்த தமிழினமும் பாதித்துவிடக்கூடாது. இம்மூன்று தரப்பும் அணிதிரண்டு பொதுவான நிலைப்பாட்டை ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு அறிவிக்க வேண்டும் என்ற சிந்தனை பல மட்டங்களில் எழுந்தது.

ஏனென்றால், இம்முறை சிறிலங்கா தொடர்பாக பிரித்தானியா, தலைமையில் இணை அனுசரணை நாடுகளே புதியதொரு தீர்மானத்தினை கொண்டுவரவுள்ளன. புதிய தீர்மானத்திற்கு சிறிலங்கா அனுசரணை வழங்குவதில்லை என்பதையும் அறிவித்துவிட்டது. சில சமயங்களில் அதனை நிராகரிக்கும் போக்கிலும் உள்ளது.

ஆகவே புதிதாக கொண்டுவரப்படும் பிரேரணையானது, சிறிலங்காவின் பொறுப்புக்கூறலை வலுவாக எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பானது. அதற்கு அமைவாக, வி.எஸ்.சிவகரன் தலைமையிலான தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் மற்றும் சிவில் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பில் தமிழ்த் தேசிய தளத்தில் உள்ள அரசியல் கட்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

கிளிநொச்சியில் ஆரம்பமான இந்த முயற்சி வவுனியா, கொழும்பு மீண்டும் கிளிநொச்சி என்று தொடர்ச்சியான சந்திப்புக்கள் கலந்துரையாடல்களை அடுத்து வெற்றி கண்டது. தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள கூட்டுக்கள் மற்றும் சிவில், மத அமைப்புக்கள் ஒன்றிணைந்து, ஐ.நா.வைக் கோரும் 'பொது ஆவணம்' தயரிப்பதென்று முடிவானது.

அதற்கு அமைவாக,

1) சிறிலங்காவை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக்கூடியதுமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச்சபை, ஐ. நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்க வேண்டுமென்று இப்புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்.

2) ஐ. நா.மனித உரிமைப் பேரவையின் தலைவர் இவ்விடயத்தை மேல் கூறப்பட்டபடி நடவடிக்கைக்காக மீளவும் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3) ஐ. நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகம் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகிற மீறுதல்களை கண்காணிக்கவும் இலங்கையில் அவ்வலுவலகமொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

4) மேலே 1) இல் கூறியதற்கு பங்கமில்லாமல் ஐ. நா. பொதுச் சபையின் உப பிரிவாக, சீரியா சம்பந்தமாக உருவாக்கப்பட்ட சாட்சிகளை சேகரிக்கிற பொறிமுறை போன்றதொன்றை (ஐஐஐஆ) கடுமையான 12 மாத அவகாச நிபந்தனையோடு ஏற்படுத்துதல்
ஆகிய நான்கு பிரதான கோரிக்கைகளுடன் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டில் பல வாதப்பிரதிவாதங்கள், விட்டுக்கொடுப்புக்கள், கொள்கை முரண்நகைகள், கையொப்பமிடுவதில் முரண்பாடுகள் என்றெல்லாம் காணப்பட்டிருந்தாலும், சிங்கள, பௌத்த தேசியவாதம் கூர்மைப்படுத்தப்பட்டுள்ள இந்த சூழலில் மூன்று தரப்புக்களும் ஒருங்கிணைந்தமை ‘பொறுப்புக்கூறலுக்கான நீண்ட பயணத்தில்’ விமர்சனங்களுக்கு அப்பாலான ஒரு மைல் கல்லாகும்.

இத்தோடு நின்றுவிடாது, மூன்று அரசியல் கூட்டுக்களும் ஜெனிவா விடயத்தில் நேர்மையுடன் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் புலம்பெயர் அமைப்புக்களுடன் கரம்கோர்த்து தொடர்ச்சியாக ‘இயங்குநிலை சக்திகளாக’ செயற்பட வேண்டியதும் ஒருங்கிணைந்து முன்வைத்துள்ள கோரிக்கைகளை நடைமுறைச்சாத்தியமாக்குவதற்காக முனைப்புடனான அழுத்தங்களை வழங்குவதும் காலத்தின் கட்டாயமாகின்றது.

மேலும் ஜெனிவா விடயத்தில் மட்டுமன்றி தமிழ் மக்களை சூழ்ந்திருக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை நோக்கிய பயணத்திலும் இவ்வாறான ஒருங்கிணைவு அவசியமாகின்றது என்ற புரிதலும் இத்தரப்புக்களுக்கு ஏற்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

---

# ‘?????????’ ?????? ???????



-தாயகன்-

'உடயவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டை' என்ற தமிழ் பழமொழி அண்மைய காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் தளத்தில் நடைபெற்று வரும் 'திருக்கூத்துக்களை' பார்க்கும் போது துல்லியமாக பொருந்தி நிற்கின்றது.

சிங்கள பெருந்தேசியவாதம், பௌத்த அடிப்படைவாதம் ஆகிய இரண்டையும் முன்னிலைப்படுத்திய பெரும்பான்மை ஆட்சியொன்று மத்தியில் இருக்கின்றது என்பதை வாயாரக் கூறும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் ஒன்றிணைந்து அதனை எதிர்த்து நிற்பதற்கு எள்ளளவும் தயாராக இல்லை என்பது அப்பட்டமாக தெரிகின்றது.

தியாக தீபத்தின் நினைவேந்தலில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்த அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்ததும் போராட்டத்தினை முன்னெடுத்ததும் தமிழ்த் தேசிய அரசியலை ஒரு 'திரட்சியாக' அடுத்த கட்டம் நோக்கி நகர்த்தும் என்று கொண்டிருந்த நம்பிக்கை உடைத்தெறியப்பட்டுள்ளது.

இப்பொழுது, கடந்த நாடாளுமன்ற தேர்தலில் உருவாகிய கூட்டுக்களே நிலைக்குமா என்றளவிற்கு நிலைமைகள் மோசடைந்திருக்கின்றன. இவ்வாறு மோசமடைந்துள்ள நிலைமைகள் புதிய அரசியலமைப்புக்கான உருவாக்கப்பணி, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் ஆகிய விடயங்களில் வெளிப்பட்டு நிற்கின்றன.

தமிழ் மக்களின் தலையெழுத்தையே தீர்மானிக்கவல்ல இந்த இரண்டு விடயங்களிலும் தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள அரசியல் கட்சிகளும், தலைமைகளும் தடம்புரண்டு கொண்டிருப்பது வேடிக்கையானதாகிறது.

இதில் முதலாவதாக புதிய அரசியலமைப்பு விவகாரத்தினைப் மையப்படுத்திப் பார்க்கின்றபோது, கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி சலனமின்றி, தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை உள்ளக்கிய வரைவினை புதிய அரசியலமைப்பினை தயாரிக்கும் நிபுணர்குழுவிற்கு முதலாவதாக தமிழ்த் தரப்பாக அனுப்பி வைத்துள்ளது

தற்போதைய சூழலில் தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு தீர்வுத்திட்டத்தினை வழங்கினால்

பலமானதாக இருக்கும் என்று பல்வேறு கருத்தாடல்கள் இருக்கையில் முன்னணியினர் அவசரப்பட்டுவிட்டார்கள் என்ற விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கின்றார். ஆனாலும், ஏனைய தரப்புக்களுடன் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதானால் முதலில் கொள்கையில் ஒற்றுமை இருக்க வேண்டும் என்கிறது முன்னணி. அதுமட்டுமன்றி 'தேசத்தினை அங்கீகரிக்கும்' கொள்கையை கைவிட்டவர்களுடன் எப்படி நாங்கள் கைகோர்ப்பது என்பதும் அத்தரப்பின் கேள்வியாக இருக்கின்றது.

மறுபக்கத்தில் மாவை.சேனாதிராஜா, விக்னேஸ்வரன், சுரேஸ்பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, அனந்தி, ஆகிய தரப்புக்கள் அதாவது (தமிழரசுக்கட்சியின் மாவை.சேனாதிராஅணியும் கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள தரப்புக்களும்) ஒருங்கிணைந்து புதிய அரசியலமைப்புக்கான செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு ஐவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.
இந்தக்குழுவிற்கு அரசியல் அனுபவத்தினை விட சட்டத்துறைசார்ந்த அனுபவம் இல்லையென்பதும், வடக்கு மாகாணசபை மற்றும் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டங்களை மையப்படுத்தியதிலிருந்து மேம்பட்ட வரைவொன்றை தயாரிப்பதாகவும் இணக்கம் ஏற்பட்டது.

ஆனால் இன்னமும் அந்த இணக்கம் முதற்படியிலேயே உள்ளது.
அத்துடன், இந்த அணி, கிழக்கு மாகாண தமிழ்த் தேசியத் தரப்புக்களைப் பற்றி கிஞ்சித்தும் சிந்தித்ததாக இல்லை. அங்கிருந்து எந்தவொரு தரப்பினையும் முன்மொழிவு வரைவினை தயாரிக்கும் பணியில் உள்ளீர்த்திருக்கவில்லை. அதுபற்றி புத்திஜீவிகள் சிலர் எடுத்துரைத்தபோதும் அதனை கருத்தில் எடுத்ததாக இல்லை.இதேநேரம், இந்த அணியில் உள்ள விக்னேஸ்வரன் தனது கட்சியான, தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பிறிதாக ஒருவரைபினை தயாரித்து வருகின்றார். அவர் அதுபற்றி ஒருங்கிணைந்த தரப்புக்களிடத்தில் தெரிவித்தும் இருக்கின்றார். இறுதியாக தமது தரப்பினால் கையளிக்கும் வரைபில் தான் தயாரித்து வரும் வரைபில் உள்ள விடயங்களையும் உள்ளீர்க்க முடியும் என்றும் கூறியிருக்கின்றார்.

விக்னேஸ்வரனின் இந்த முயற்சி ஒரு முற்பாதுகாப்பு நடவடிக்கை என்று தான் எண்ணத்தோன்றுகின்றது. ஏனென்றால் கடந்த 19ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிவொன்றை இறுதி செய்திருக்கின்றது.
ஜனாதிபதி சட்டத்தரணிகளான கனகஈஸ்வரன், மற்றும் சுமந்திரன் ஆகியோர் கூட்டிணைந்து தயாரித்த அந்த வரைபினை பங்காளிக்கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வரைவு அடுத்தவாரம் நிபுணர்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளது
இதில் விசேடம் என்னவென்றால், ஒருங்கிணைந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளினால் புதிய அரசியலமைப்பினை தயாரிப்பதற்காக போடப்பட்டுள்ள ஐவர் கொண்ட குழுவின் உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராஜா பங்கேற்றதும், கூட்டமைப்பு வரைவினை ஏற்று அங்கீகரித்ததும் தான்.

அதாவது மாவை.சேனாதிராஜா, கூட்டமைப்பு தாயரித்த அரசியலமைப்பு வரைவு முன்மொழிவுக்கும் அதற்கு வெளியில் தயாரிக்கப்படவுள்ள வரைவுக்கும் உறுப்பினராக இருக்கின்றார். மாவையின் இரண்டு தோணிப் பயணம் பெரும்பாலும் வெற்றியடைவதற்கு வாய்ப்புக்கள் அற்றநிலை தான் ஏற்பட்டுள்ளது.
ஏனெனில் கூட்டமைப்பின் வரைவினை ஏற்றுக்கொண்டுள்ள மாவை தற்போது விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களை அதனை அங்கீகரிக்குமாறு வலியுறுத்த விளைந்தால் அவர்கள் நிச்சயமாக அதனை எதிர்த்தே நிற்பார்கள். இதனால் ஈற்றில் 'தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி'யின் பெயரால் விக்னேஸ்வரன் தலைமையில் அவர் தயாரிக்கும் வரைவே நிபுணத்துவக் குழுவிடத்திற்குச் செல்லும் வாய்ப்புக்களே அதிகமாகியுள்ளன.

புதிய அரசியலமைப்புக்கான முன்மொழிவு வரைவினை தயாரிப்பதில் நிலைமை இவ்வாறிருக்க, மார்ச் மாதம்

நடைபெறவுள்ள ஜெனிவா அமர்பில் இனஅழிப்புச் செய்த சிறிலங்கா அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலைச் செய்வதற்காக புதிய பிரேரணையொன்றே கொண்டுவருவதற்கு அதிகளவு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே சிறிங்கா அரசாங்கத்திற்கு இரண்டு தடவைகள் காலஅவகாசம் வழங்கப்பட்டாகிவிட்டது. கடந்தஅரசாங்கத்திற்கும், கூட்டமைப்பிற்கும் இடையில் இருந்த தேனிலவு அதற்கு காரணமாக அமைந்தது. ஆனால் தற்போதைய ராஜபக்ஷ சகோதரர்களின் அரசு ஜெனிவா தீர்மானத்திலிருந்து விலகுவதாக அறிவித்து விட்டது.
எதிர்வரும் மார்ச் மாதம் நிறைவேற்றும் தீர்மானத்தினையும் அந்த அரசு நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதனை நிராகரிக்கவே திட்டமிட்டு வருகின்றது. அதற்காக சிறிலங்காவினுள்ளும், வெளியிலும் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

ஆனால், பாதிக்கப்பட்ட தரப்பின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக்கொண்டிருக்கின்றார்கள். புலம்பெயர் அமைப்புக்கள் இரண்டு அடுத்துவரவுள்ள ஜெனிவா பிரேரணை தொடர்பில் தமிழ்த் தரப்பு செய்ய வேண்டிய உத்தேச முன்மொழிவுகளை குறிப்பிட்டு சுமந்திரனிடம் அனுப்பி அதற்கு ஏனை தரப்புக்களின் ஆதரவினையும் திரட்டுமாறு கோரியிருக்கின்றன.

எனினும் தான் அதற்கான பணியை முன்னெடுப்பதாகவும் தான் ஏற்கனவே வரைபினைத் தயாரித்துவிட்டதாகவும் அந்த வரைவிற்கு ஆதரவினை திரட்டுவதாகவும் பதிலளித்திருக்கிறார். இதனையடுத்து ஆவணமொன்றை விக்னேஸ்வரனுக்கும், கஜேந்திரகுமாருக்கும் அனுப்பி வைத்திருந்தார்.
ஆனால் அதில் மீண்டும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கும் வடிவிலேயே பரிந்துரைகள் காணப்பட்டிருக்கின்றன. இதனை அவதானித்த விக்கியும் கஜேந்திரகுமாரும் அதனை நிரகாரித்ததோடு உள்ளடக்கத்தையும் பகிரங்கப்படுத்தினர்.

இந்தச் செயற்பாடு 'விஷமத்தனமான பிரசாரம்' என்று சுமந்திரன் கூறிவிட்டு தன்னுடைய அடுத்த வேலைக்குச் சென்விட்டார். ஆனால் விக்னேஸ்வரன் விட்டு வைக்கவில்லை. நான் கற்பித்த சட்டக்கல்லூரியில் என்னிடம் படித்துவிட்டு என்னையே ஏமாற்றப் பார்க்கின்றீரா? என்று பகிரங்கமாகவே சுமந்திரனை கேட்டுவிட்டார்.

இதனால் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் சுமந்திரன் விக்கிக்கும், கஜேந்திரனுக்கும் வழங்கிய ஆவணம் தன்னுடையதல்ல என்று கையை விரித்துவிட்டார். இந்த இடத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், ஏனைய பங்காளிக்கட்சிகள் ஆகியவற்றிடம் ஜெனிவா சார்ந்த ஆவணத்தினை கையளிக்காது ஏன்? என்ற கேள்விஎ எழுக்கின்றது.
அவர்களும் தனித்துவ அரசியல் கட்சியைக் கொண்டவர்கள் அல்லவா. அத்தோடு ஆவணத்தினை ஏனைய தரப்பினருடன் பகிர்ந்த விடயத்தினை சுமந்திரன் சம்பந்தனுக்கு கூட தெரிவிக்கவில்லை. சம்பந்தனே 'ஏன் அவர் ஆவணத்தினை பகிர்ந்தாரென்று எனக்கு தெரியாது' என்று பகிரங்கமாகவே கூறிவிட்டார்.

இப்போது எல்லாப்பக்கத்தாலும் அம்பலமாகிவிட்டார் சுமந்திரன். ஆனால் இராஜதந்திர தரப்புக்களுடன் தன்னுடைய சந்திப்புக்களை நடத்துகிறார். அமெரிக்க தூதுவர், பிரித்தானிய உயர்ஸ்தானிகர், கனடிய உயர்ஸ்தானிகர், ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் என்று பட்டியல் நீண்டு கொண்டு செல்கின்றது.
இந்த சந்திப்புக்கள் அனைத்தையும் தனியே தான் மேற்கொள்கின்றார். இதுபற்றி கூட்டமைப்பில் இருக்கும் எந்தவொரு தரப்பினரும் கேள்வி எழுப்புவதாக இல்லை. வெறுமனே 'சுமந்திரனின் கருத்து கூட்டமைப்பின் நிலைப்பாடாகாது' என்று ஊடக அறிக்கையை வெளியிட்டு விட்டு அமைதியாக இருக்கின்றார்கள். இது அந்த தரப்பினருக்கு தமிழ் மக்கள் வழங்கிண ஆணையை கருத்தில் கொள்ளாமையை தான் காட்டிநிற்கிறது.

அதுமட்டுமன்றி, தற்போது சுமந்திரன், விக்கி, கஜேந்திரகுமார் என்று மூன்று தரப்புக்கள் ஜெனிவா பிரேரணையில் உள்ளீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் முன்மொழிவுகளைச் செய்யவுள்ளன. சிலநேரங்களில் ரெலோவும், புளொட்டும் கூட தனியான முன்மொழிவுகளை அனுப்பி வைக்கலாம். தமிழரசுக்கட்சியின் சிறிதரன், சார்ள்ஸ் போன்றவர்கள் கூட சுமந்திரனின் விடயப்பரப்புடன் இணக்கத்திற்கு வரமுடியாத நிலைமை ஏற்படலாம்.

இத்தகைய பிளவுகளால் குழப்பங்களால் நெருக்கடிகளுக்கு உள்ளாகப்போவது என்னவோ நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் தமிழ்த் தரப்பு தான். அதேநேரம், ஒன்றுக்கு மேற்பட்ட முன்மொழிவுகள் வழங்கப்படுகின்றபோது எதனை கருத்தில் கொள்வதென்ற குழப்பம் 'இராஜதந்திர' தரப்புக்களுக்கு தற்போதே ஆரம்பித்தாகிவிட்டது.

ஆக, மொத்தத்தில் சிறிலங்கா அரசாங்கம் பொறுப்புக்கூறலைச் செய்வதற்கு மல்லுக்கட்டுவதற்கு அப்பால் தமிழ்த் தரப்புக்களின் குடுமிச்சண்டைகளால் பொறுப்புகூறலை செய்வதற்கான பரிந்துரைகள் நிச்சயம் மலினப்படுத்தப்பட்டு விடும் ஆபத்தே உள்ளது. இத்தகைய மோசமான விளைவுகள் ஏற்படுவது தடுக்கப்பட வேண்டியதொன்று. ஆனால் தாயகத்தமிழர்களுக்கும், புலம்பெயர் தமிழர்களுக்கு உரிய 'மேய்பர்' இல்லையே.

---

# ?????????? ??????????? ??????? ??????







**????????? ???.??.???????**

இலங்கையின் வடக்கு கிழக்கை பெரிதும் பாதித்த புரேவி புயல், யாழ். குடாநாட்டின் வெளிவேட அபிவிருத்தியையும், அரச அதிகாரிகள் , குடாநாட்டு மக்கள் , அரசியல் தலைவர்களினது பொறுப்பற்ற செயற்பாடுகளை வெளிக்காட்டி கடந்துள்ளது.

இந்த தாக்கத்தால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்படைந்துள்ளனர். அன்றாடக்கூலித்தொழிலாளிகளை மட்டுமன்றி, விவசாயிகள், மீனவர்கள், வர்த்தகர்கள், சிறு வியாபாரிகள், மருத்துவர்கள், தாதியர்கள் என ஒட்டுமொத்த மனிதர்களையும் பாரபட்சமின்றி பாதித்தும் , போதித்தும் நகர்ந்துள்ளது.

யாழ். குடாநாடு மலைகளோ, நீர்வீழ்ச்சிகளோ, ஆறுகளோ இல்லாத தட்டையான சுண்ணக்கல் படிமத்தால் உருவான பூமி. ஆனாலும் கடல்வளத்தைக்கொண்டிருப்பதாலும், அதன்மூலமாக ஏற்படும் பருவப்பெயர்ச்சிக்காற்று மழைவீழ்ச்சியின் செல்வாக்கும், , சுண்ணக்கல் தரையில் பொசிவடைந்து இங்கு தரைக்கீழ் நீர்வளத்தை தாராளமாக்கி, உயிர்வாழ்தலை உறுதிப்படுத்திக்கொண்டிருக்கிறது.

இயற்கையாக கிடைக்கும் மழைநீரை ,யாழ். மண்ணின் பிரதான நன்னீரதேக்கும் விருட்சங்களான பனை, தென்னை,மற்றும் பெரும் விருட்சங்கள், குளங்கள், கேணிகள், காணித்தடுப்புக்கள், சிறு குட்டைகள், கிணறுகள், வயல் காணிகள் போன்றவை தரைக்கீழ்நன்னீர்ப்பொசிவை ஊக்குவிக்கும் ஊக்கிகளாக செயற்படுகின்றன.

ஆனால் இந்த தரைக்கீழ் நீர்ப்பொசிவை ஏற்படுத்தும் இவ்வாறான ஊக்கிகளை நவநாகரீகம் என்றும் அபிவிருத்தி என்றும் கூறி படிப்படியாக அழிக்கத்தொடங்கியதால் இந்த முறை நிவார்புயலால் ஏற்பட்ட வெள்ளம், யாழ். குடாநாட்டையே வெள்ளக்காடாக்கி , அல்லோல கல்லோலப்படுத்தி விட்டது.

இதற்கெல்லாம் என்ன காரணம்?

1.சிறந்த வடிகால் அமைப்பும் பராமரிப்பும் இல்லை.

2. குளங்கள், ,கேணிகள் போன்றவை அபிவிருத்தி என்ற போர்வையில் மூடப்பட்டமை.

3.கிணறுகள் இடத்தைப்பிடிப்பதாக கூறி, குழாய்க்கிணறுகள் அடித்தமை.

4. இனப்பெருக்கத்தால் காணிகளைத்துண்டாடி , மலசலகூடம், ,குழாய்க்கிணறென புதிய குடும்பங்கள் பெருகியமை.

5. தடுப்பணைகளை சரிவரப்பேணாமையால், சமுத்திர நீர் குடாநாட்டுக்குள் ஊடுருவியமை.

6. சுற்றுச்சூழல் சார்ந்த அக்கறை மக்களுக்கோ அரச அதிகாரிகளுக்கோ அரசியல் தலைவர்களுக்கோ இல்லாமை.

7 . துறைசார்ந்த அதிகாரிகளின் அசமந்தப்போக்கு

8. வயல்காணிகளை நிலக்காணிகளாக்கி கட்டிடங்களை கட்டியமை.

9. பாரிய கட்டிடங்களை கட்டுவதற்காக சுண்ணக்கல் படைகளை துளையிடல்.

இவ்வாறு பல காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

யாழ். குடாநாட்டின் வடிகால் அமைப்புக்கள், மலசலகூட அமைப்புகள், கட்டட அமைப்புகளை நோக்கும் போது, வடிகால் செயற்பாடு பூச்சிய நிலையிலேயே காணப்படுகிறது. அரச அதிபரோ, அரச அதிகாரிகளோ, சுகாதாரப்பிரிவினரோ இதுபற்றி அக்கறைப்படுவது மிகக்குறைவு. வடிகால்களை ஆண்டுக்கு ஒருதடவையாயினும் புணரமைப்பதில்லை. வடிகால்கள் எங்கும் புற்களும், பாத்தீனியச்செடிகளும் பெருக்கமடைந்து வடிகால் கழிவு நீரில் உயிர்வாழ்கின்றன. இவை இக்கழிவு நீரினை தரைக்கீழ் நீருடன் பொசியச்செய்வதால், தரைக்கீழ் நீர்வளமும் மாசடைகிறது. நுளம்புக்குடம்பிகளும் கிருமிகளும் போட்டி போட்டு பெருகுமிடமாகவும் இந்த வடிகால்கள் விளங்குகின்றன.



வடிகால்கள் ஒரு சீரமைப்போடு ஓடிக்கொண்டிருந்தால் இத்தத்துயரம் ஏற்படப்போவதில்லை. மக்களும் வர்த்தகர்களும் தம் குப்பைகளைப்போடும் குப்பைத்தொட்டியாக இந்த வடிகால்களுக்குள் போடுவதும் வேதனைமிக்க செயலாக அமைகிறது. இதனால் வடிகால்கள் அடைபட்டு கழிவு நீர் ஓடாதநிலையை ஏற்படுத்தியதால் நகர்ப்புறம் முழுதும் இந்தப்புரவிப்புயல் கால வெள்ளம் வெள்ளோட்டத்தை விட்டுக்காட்டி, வெட்கப்படுத்தி நகர்ந்துள்ளது.

அத்தோடு மலசலகூடங்கள் அமைப்பதிலும் குறைபாடுகளுண்டு. நகர்ப்புறத்தில் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள், விடுதிகள் பல தோன்றியதால் அங்கு பாரிய குழிகளைத்தோண்டி கட்டப்பட்ட மலசலகூடங்களால், நிலத்தடி நீருடன் மலமும் கலந்து தரைக்கீழ்நீர்வளத்தை நாசப்படுத்துகின்றது. இதனால் வாந்திபேதி, வயிற்றோட்டம், கொலறா போன்ற நோய்த்தாக்கங்களும் ஏற்படுகின்றன. இதே நிலையே கிணறுகளுக்கும் ஏற்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான பகுதிகளில் கிணற்றுநீருடன் மலநீர் கலந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான மக்கள் அன்றாடக்குடிநீரை பணம் கொடுத்தே வாங்கிப்பருகும் நிலை தோன்றியுள்ளது.

கடல்நீர் குடிமனைகளுக்குள் புகுந்து விடாதிருக்க கட்டப்படும் அணைக்கட்டுக்கள் சரிவரக்கட்டுப்படாத காரணத்தால்,

கடல்நீர் குடிமனைகளைநோக்கி புகுவதால் தரைக்கீழ் நன்னீர் வளம் பாதிப்படைந்துள்ளது. யாழ். குடாநாடு தொண்டைமானாறு கடல்நீரேரி, ஆனையிறவுக்கடல்நீரேரி, உப்பாற்றுக்கடல்நீரேரி, பூநகரிக்கடல்நீரேரி என சுற்றிவர கடலாலும் கடல்நீரேரிகளாலும் சூழ்ந்த நிலப்பகுதியைக்கொண்ட ஒரு தீபகற்பம். இந்த கடல்நீரேரிகளை அண்டி அணைகளைக்கட்டி, ,கடல்நீர் உள்நுழையாது பாதுகாப்பது வழமை. இந்த வழமைகள் சீர்குலைந்ததால், உவர்நீர் தரைக்குகீழ் நன்னீர்வளத்தோடு இணைந்து தரைக்கீழ் நன்னீரின் சுவையிலும் தரத்திலும் மாற்றத்தை

ஏற்படுத்தி விட்டது.



அணைத்தடுப்பு வழியாக மட்டுமன்றி, அதிகரித்த

துளையிட்டு தோண்டிய குழாய்க்கிணற்றுப்பாவனை, மின்சார மோட்டர்மூலமான நீர் உயர்த்துகை, சிக்கனமற்ற நன்னீர்ப்பாவனை போன்றவற்றால் நன்னீர்வளம் சுருக்கமடைகிறது. இவ்வாறு நன்னீர் சுருக்கமடையும் போது அந்த சுருக்கத்தை நிரப்புவதற்கு உவர்நீர் உட்புகுந்து கொள்கிறது. இது பெரும் நீர்ப்பற்றாக்குறையையும் வாழ்தல் பிரச்சனையையும் ஏற்படுத்தியுள்ளது. யாழ். குடாநாட்டின் 65% மான கடற்கரையோரப்பகுதிகள் தரைக்கீழ்வள நன்னீர் இழப்பை எதிர்நோக்கியுள்ளன. தீவகப்பகுதிகள், குருநகர், பாசையூர், கொட்டடி, நாவாந்துறை, காக்கைதீவு, அராலி, பருத்தித்துறையின் சில பகுதிகள், பொலிகண்டி, பூநகரி போன்ற கரையோரப்பகுதிகள் உவராக்கத்தால் பாதிப்படைந்து வருகின்றன. அதுமட்டுமன்றி வலிகாமத்தின் செம்மண் முக்கோணப்பிரதேசங்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

யாழ். குடாநாடானது புவிச்சரிதவியல் வரலாற்றில் மயோசின் காலத்து சுண்ணக்கல் அடையற்பாறை அடுக்குகளை கொண்டமைந்த தட்டையான நிலத்தளமாகும். அடையற்சுண்ணக்கல்பாறைகள் அடுக்கு அடுக்காக அமைந்திருக்கும் இயல்பு கொண்டவை. இவற்றின் உடற்பாகத்திலே மூட்டுக்களையும் நுண்துளைகளையும் கொண்டிருப்பவை. இதன் காரணத்தாலேயே யாழ். தீபகற்பத்தின் நன்னீர் வளத்தை தம்முடலின் மேல் தாங்கி, உயிரினம் வாழ்வதற்கு ஏற்ற வசதியைக்கொடுத்துள்ளன. இயற்கையாக கிடைக்கும் மழைநீரை சேமித்து, கடலுடன் சென்றடையாமல் தாங்கி, உயிர்வாழ்தலையும் மண்ணின் உறுதித்தன்மையையும் பேணுகின்றன.

இவ்வாறான அடையற்சுண்ணப்பாறைகளை அதன் இயல்புகளை அறியாத யாழ்.குடாநாட்டு மக்கள், கட்டிடங்களை கட்டுவதற்காகவும்,சுண்ணக்கல் தேவைகளுக்காகவும், வேறு தேவைகளுக்காகவும் அகழ்ந்து சிதைவடையச்செய்கின்றனர். இதனால் நன்னீர் பாழடைகிறது. நிலக்கட்டுமானமும் அற்றுப்போகிறது.

புரெவி புயல் ஏற்படுத்திய வெள்ளப்பெருக்கின் பின்னர் தான் பலர் குளத்தின் அருமையை உணரத்தொடங்கினர்.

வடமாகாணத்தில் கிட்டத்தட்ட 600 குளங்கள்/ குட்டைகள்/ நீர்நிலைகள் காணாமல் போயிருக்கலாம் என பேசப்படுகிறது. யாழ் மாவட்டத்தில் மட்டும் 249 குளங்கள் காணமற்போயுள்ளன.

2016 நடாத்தப்பட்ட குளக் கணக்கெடுப்பின் படி, யாழ் மாவட்டத்தில் உள்ள 16 நீர்ப்பாசன பிரிவுகளில் மொத்தமாக 1043 குளங்கள் அடையாளப்படுத்தப்படக் கூடியவாறு இருந்ததாகவும் தற்போது 794 குளங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன அல்லது பாவனையில் உள்ளதாக அதே கணக்கெடுப்பில் ஆவணப்படுத்தபட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. மீதி 249 குளங்கள் மூடப்பட்டு விட்டதாக அதே கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளதாக தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. எஞ்சிய குளங்களும் தூர்வாரப்படுவதில்லை. சிறந்த பராமரிப்பில்லை. குப்பைகளையும் கூழங்களையும் போடுமிடமாக மாறியுள்ளன.

மழைநீரைச்சேமித்து வைத்துப்பயன்படுத்திய மக்கள் அருகிவிட்டார்கள். வெளிநாட்டு மோகமும் நவநாகரீகப்போக்கும் தன் வாழ்விடம் குறித்த அக்கறையீனத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் மனநிலை மாறிவிட்டது. நிர்வாக அதிகாரிகள் நிர்வாக கட்டமைப்பை கையாளாமல் அரசியலோடு தொங்கித்திரிவது,

அரசியல்வாதிகள் அரச அதிகாரிகளின் வேலைகளுக்குள் மூக்கை நுளைப்பது, மக்களுக்கும் இளைய தலைமுறைக்கும் விவசாயத்தின் மேலிருந்த ஈடுபாடு குறைந்தமை போன்ற காரணங்களே நிலக்கட்டுமானத்தில் குளங்களைப்பேண முடியாமல் போனதற்கான பெருங்காரணங்களாகின்றன. அதுமட்டுமன்றி அரச அதிகாரிகளே சூழல்சார்ந்த எண்ணக்கருக்களை கடைப்பிடிப்பதில்லை.

தெல்லிப்பழை பிரதேச செயலகம், அண்ணமார் கோயில் குளம் என்ற குளத்தை நிரப்பி கட்டப்பட்டிருக்கிறது. யாழ் . நகரின் புல்லுக்குளத்தை நிரப்பி கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இப்படி நிறையவே அடுக்கிக்கொண்டு போகலாம். இத்தமாதிரியான சுற்றுச்சூழல் சார்ந்த அக்கறையற்றநிலை நீடித்தால் நாளை யாழ். தீபகற்பத்தில் வாழும் மனிதர்களின் வாழ்தல் நிலை கேள்விக்குறியதாகிவிடும். வாழ்வாதார பொருளாதார ரீதியாகவும், குடிநீருக்காகவும் பிற மாவட்டங்களில் தங்கியிருக்கும் நிலை தோன்றும். கடைசியில் வெள்ளத்தோடு வெள்ளமாகி கடலில் அமிழ்ந்தும் விடும். இந்த நிலை தோன்றாதிருக்க வேண்டுமாயின் கடந்து சென்ற நிவார்ப்புயல் புகட்டிய பாடத்தில் இருந்து, புதிய படிப்பினைகளை கற்று நிமிர்தல் அவசியமானது.

---

# ????????????? ??????





தேசிகன்

சிறிலங்காவில் கடந்த வாரம் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகள் ஆட்சியில் இருக்கும் ராஜபக்ஷ சகோரர்களின் 'அரசியல் இயலாமையை' அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

நாட்டின் தேசிய பாதுகாப்பையும், சிங்கள பௌத்த கடும்போக்கு வாதத்தினையும் கையிலெடுத்து கடந்த 2019 நவம்பரில் ஆட்சிப் பீடமேறியவர் கோட்டாபய. அவர் பதவிக்குவந்து முதலாவது ஆண்டு

நிறைவடைந்திருக்கின்றது.

சிறிலங்காவில் கொரோனாவின் கட்டுறாத நிலையால் தனது அரசியல் வெற்றியை பெருமெடுப்பில் கொண்டாட முடியாத நிலையில் அவர் இருந்தார். இதனால் தொலைக்காட்சி வாயிலாக விசேட உரையொன்றை நாட்டு மக்களுக்கு ஆற்றினார்.
கொரோனா நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் சாதாரண மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாவின் உரை 'நிவாரணங்களை' வழங்குவதாக இருந்திருக்கவில்லை. அது பெருவாரியானவர்களுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

தனது முதலாவது ஆண்டு காலத்தில் தான் செய்த வீரதீர செயல்களை முன்னிலைப்படுத்தியும், வாக்குறுதி அளித்து செய்ய முடியாது போன விடயங்களுக்கு அரசியல் வாதிகளைப்போன்று காரணங்களையும் கூறியிருந்தார்.

2009 இற்கு பின்னர் ராஜபக்ஷவினருக்கு போர் வெற்றிவாதம் ஆட்சி அதிகாரத்தினை தக்கவைப்பதற்கான தீனியைப் போட்டுக்கொண்டிருக்கின்றது. இது வெளிப்படையான விடயம். ஆனால் கோட்டாபய, தன்னிலையை தக்கவைப்பதற்காக போர் வெற்றிவாதத்திற்கும் அப்பால் சென்றிருக்கின்றார். அதுவே அவருடைய முதலாவது ஆண்டு உரையின் சாரம்சம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் கோட்டாபய ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு இலகுவாக வழியமைத்துக் கொடுத்தது. அந்தக்காலத்திலிருந்தே 'நாட்டின் தேசியப் பாதுகாப்பு' என்பதையே பிரதான பொருளாக பேச ஆரம்பித்திருந்தார்.
தற்போது ஒருவருட ஆட்சிக்காலமும் நிறைவடைந்திருக்கின்றது. இன்னமும் தேசிய பாதுகாப்பு விடயத்தினையே அவர் முன்னிலைப்படுத்துகின்றார். அதன் ஊடாக தான் 'தேசப்பற்றாளன்' என்று பெரும்பான்மை சிங்களவர்களுக்கு சேதி சொல்லியிருக்கின்றார்.



தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்புத்துறை கட்டமைப்புக்கள் மீளவும் கட்டியெழுப்பப்பட்டுவிட்டதாகவும் கோட்டாபய தனது உரையில் முதன்மைத் தானம் வழங்கி குறிப்பிட்டிருந்தார். சமகால பூகோளச் சுழலில் சிறிலங்கா மீது வேறெந்தவொரு நாடும் படையெடுக்கப்போவதில்லை. உள்நாட்டிலும்

ஆயுதப்போராட்டம் உருவெடுக்கப்போவதும் இல்லை.

ஆகவே கோட்டாபயவினுடைய தேசிய பாதுகாப்பின் பலம், பலவீனத்தின் அளவுகோலை தற்போதைக்கு கணிப்பிடவே முடியாது. இன்னொரு சம்பவம் இடம்பெறும் வரையில் சிங்கள தேசியவாதிகளிடத்தில் அவருடைய தேசியபாதுகாப்பு பீடிகை நம்பிக்கைக்குரியதாகவே இருக்கப்போகின்றது. அது அவருடைய ஆட்சி அதிகாரத்தினையும் உறுதிப்படுத்தத்தான் போகின்றது.
தான் சிங்கள பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்டமை, மற்றும் பௌத்த தேரர்களுடன் மாதமொருமுறை ஆலோசித்தே செயற்படுகளை முன்னெடுக்கின்றமை ஆகிய இரண்டு விடயங்களுக்குமே கோட்டபாய தனது உரையில் இரண்டாவது முக்கியத்துவம் அளித்திருந்தார்.

இந்த வெளிப்பாடுகள் மூலம், தான் சிங்கள பெரும்பான்மை இனமக்களுக்கே உரித்தானவர் என்பதையும், தன்னையொரு பௌத்த மேலாதிக்கவாதி என்பதையும் அவர் பிரதிபலித்திருக்கின்றார்.

பௌத்த பீடங்களை கைக்குள் போட்டு வைத்திருப்பதன் மூலம் தனது பதவிக்கு எவ்விதமான பங்கமும் ஏற்படாது என்பது கோட்டாவின் அரசியல் கணக்காக இருக்கலாம். ஆனால் சிறிலங்கா ஒரு பல்லினத்துவ நாடு. இங்கு சிங்களவர்களை விடவும் ஏனைய பூர்வீக சமூகங்களும் இருக்கின்றன என்பதை அவர் மறந்துவிட்டார்.
இந்த நிலைமையானது, தமிழர்கள் உள்ளிட்ட ஏனைய இனத்தினர் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுகின்றனர் என்பதை முழு உலகிற்கும் அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது. இதனை கடும்போக்குச் சிந்தனையாளரான கோட்டாபய உணர்ந்திருக்க வாய்ப்பில்லை.



இனப்பிரச்சினையே இல்லையென்றும், வேலையில்லாப் பிரச்சினையே இருக்கின்றது என்றும் கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டவர் கோட்டபாய. அவ்விதமான ஒருவரிடத்தில் சிறுபான்மை சமூகங்கள் எதிர்பார்ப்புக்களை கொள்வதே வீணானது.

ஆனால், தனது அதிகாரப்பரப்பினை விஸ்தரிப்பதற்காக, தான் எல்லோருக்கும் ஜனாதிபதி என்று ஒருவருடத்திற்கு முன்னதாக ருவன்வெலிவிசாயவில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் அவர் கூறியதை இப்போது மறந்திருக்கலாம். ஆனால் தமிழ் பேசும் சமூகம் மறக்கவில்லை.

ஆகமொத்ததில் கோட்டாபய, தன்னுடைய 'அரசியல் ஆளுமை' இன் இயலாமையை மறைப்பதற்காக தேசியபாதுகாப்பு, சிங்கள பௌத்த தேசியவாதம், கொரோனா ஆகிய சொற்பதங்களை கனகச்சிதமாக தனது உரையில் பயன்படுத்தி பெரும்பான்மை சமூகத்தை மயிலிறகால் வருடிக்கொடுத்திருக்கிறார்.

இந்தப்புரிதல் தமிழர்களும், முஸ்லிம்களும், மலையகத்தமிழர்களும் நன்றாகவே உள்ளது. அவ்விதமான புரிதலொன்று தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு உருவாக இன்னும் சில காலமெடுக்கலாம்.
தம்பியாரின் நிலைமை இவ்வாறிருக்க, தமையனார் பிரதமர் மஹிந்த. அவர் சிறிலங்காவின் 75ஆவது வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பித்திருந்தார். ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பொதுஜனபெரமுன கட்சியின் கன்னி வரவு செலவுத்திட்டம்.



முன்னாள் நீதி அமைச்சர் ரொனி டி மலுக்கு (12தடவை) அடுத்தபடியாக 11ஆவது தடவையாக 75 வயதான மஹிந்த வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பித்தார். வழமையாக கம்பீரமாக நின்று உரையாற்றும் மஹிந்தவால் இம்முறை அவ்வாறு செய்ய முடிந்திருக்கவில்லை. உடல் தளவடைந்திருந்தது.
வெறுமனே 51 பக்கங்கள் கொண்ட இந்த வரவு செலவுத் திட்டத்தினை அவரால் நின்றவாறு முழுமையாக வாசித்திருக்க முடிந்திருக்கவில்லை. இடைவெளிகோரினார். பின்னர் அமர்ந்து வாசித்தார்.

ஒருகட்டத்தில் மஹிந்த எப்படியாது வாசிப்பை பூர்த்திசெய்துவிடவேண்டும் என்ற நிலைமையும் ஆளும் தரப்பிடத்தில் காணப்பட்டது. இவ்விதமாக தளர் நிலையில் மஹிந்த சமர்ப்பித்த இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மீது சிறிலங்காவின் அனைத்து தரப்பினதும் எதிர்பார்ப்பு அதிகமாகவே இருந்தது.

அந்த எதிர்பார்ப்புக்கான அடிப்படைக் காரணம் கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளே. சாதரண மக்கள் முதல், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் என்று அனைவருமே முடங்கியிருக்கும் நிலையே தற்போதுள்ளது.

அவ்வாறான நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு செலவுத்திட்டம் ஏமாற்றத்தினையே அளித்துள்ளது. இந்த வரவு – செலவுத்திட்டத்தின் மொத்த வருமானம் 1961 பில்லியன் ரூபா, செலவீனம் 3525 பில்லியன் ரூபா. துண்டு விழும் தொகையாக 1564 பில்லியன் ரூபா. வழமைக்கு மாறாக துண்டுவிழும் தொகை, 45சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு கொரோனா பதிப்பால் நிவாரணங்கள் வழங்க வேண்டியுள்ளதாக காரணம் கூறப்பட்டிருக்கின்றது.

சிறிலங்காவின் சர்வதேச கடன்களின் தொகை 35.4 பில்லியன் டொலர்கள். இதில் இவ்வருடத்துக்கு மட்டும் 4.5 பில்லியன் டொலர்களை செலுத்தவேண்டியுள்ளது. அதேபோன்று 6700 பில்லியன் ரூபா உள்நாட்டு கடன்களும் உள்ளன.
இந்த கடன்களை செலுத்துவற்கு அப்பால் இவற்றுக்கான அடுத்த தவணை வட்டியை எவ்வாறு செலுத்தப்போகின்றது என்பது புரியாத புதிராகவே உள்ளது. இதனைவிடவும் பொhருளாதார வளர்ச்சி 5.5 சதவீதமாக எதிர்பார்க்கப்படுகின்றது. உலகப்பொருளாதாரம் முடங்கிக் கிடக்கையில் அது சாத்தியமா என்பதும் கேள்விக்குறியே.

இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுக்கான இறக்குமதி செலவினத்தில் 300 கோடி டொலர்களை அரசாங்கம் சேமித்துள்ளது. இதனால் அந்நிய செலாவணி சந்தையில் 300 மில்லியன் டொலர்களை கொள்வனவு செய்யவும் மத்திய வங்கிக்கு முடிந்துள்ளது. ரூபாவின் பெறுமதியும் ஸ்திரமாக்கப்பட்டுள்ளது.
ஆனால் இறக்குமதிகளை கட்டுப்படுத்தும் சூத்திரத்தினை தொடர்ந்து கடைப்பிக்க முடியாது. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரித்தால் அதற்கு முதலாவதாக முதலீடுகள் அவசியம், அடுத்தாக சந்தைவாய்ப்பு விஸ்தரிக்கப்பட வேண்டும். சமகாலச்சூழல் அதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கப்போவதில்லை.

ஆக, மொத்தத்தில் மஹிந்தவின் 2021வரவு செலவுத்திட்டம், கற்பனைக்கு அப்பாற்பட்டே இருக்கின்றது. அதில் உள்ள முன்மொழிவுகள் அனைத்துமே கவர்ச்சிகரமானவை.
அவற்றை நiடைமுறைப்படுத்துவதற்காக பெருந்தொகை நிதி தேவை. ஆதற்காக எந்த திட்டங்களையும் கூறாது வெறுமனே வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பித்துள்ளமை அரசியல் அனுபவம் மிக்க மஹிந்தவின் இயலாமையை புடம்போட்டு காட்டுகின்றது.

நிதியைப் பெறுவதற்கு வெளிநாட்டு கடன்கள், நன்கொடைகள் என்பனவற்றுக்கு அப்பால் தற்போதைக்கு சிறிலங்காவின் பெருநம்பிக்கைக்குரிய ‘குபேரனாக’ இருப்பது சீனா தான்.
அரசாங்கத்தினை ஸ்தரப்படுத்த சிறிலங்கா சீனா பக்கம் வெகுவாக சாய்கின்றபோது, இயல்பாகவே பூகோள, பிராந்திய மூலோபாய குழப்ப நிலை சிறிலங்காவில் மேலும் அதிகரிக்கும். அது ராஜபக்ஷ குடும்பத்திற்கு தொடர் தலைவலியாகவே நீடிக்கப்போகின்றது.

---

# ??????????? ?????? ; ?????????????




© kumanan



**?????????**
**???.??. ???????**

காலத்திற்கு காலம் இறைதூதர்களும் சீடர்களும் தோன்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவ்வாறான இறைதூதர்களையும் சீடர்களையும் மீட்பர்கள் என மக்கள் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். இந்த மீட்பர்கள் கருத்தில் எடுக்கப்படாத மக்களுக்காக, மக்களின் அபிலாசைகளை தீர்த்து வைக்க யாருமே இல்லை என ஏங்கும் போது, ஒரு சமூகமக்களால் இன்னொரு சமூகமக்களாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாதைகளை அனுபவிக்கும் போது, ஒடுக்கப்பட்டு நீதியும் நியாயங்களும் பக்கச்சார்பாகவும் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் போதும், அவர்களை அவர்களின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிப்பதற்காக, மானிடநேயமுள்ளவர்களின் கவனத்திற்கு இப்படியும் ஒரு சமுகம் தத்தளிக்கும் செய்தியை தெரிவிப்பதற்காகவும், மானிடநேயம் மலரவேண்டும் என்பதற்காகவும் அவர்களில் இருந்தே பிறப்பெடுப்பவர்களாக , இந்த மீட்பர்கள் விளங்குகிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு விடுதலைப்போராட்ட வரலாற்றிலும் இறைதூதர்களும் சீடர்களும் பிறப்பெடுத்தவாறே இருக்கிறார்கள். இவர்கள் விடுதலைக்காக பாடுபடுகிறார்கள். விடுதலைசார்ந்த கருத்துக்களையும் விழிப்புணர்வையும் மக்களுக்கு வழங்குகிறார்கள். அவர்களின் விடுதலைக்காக தமது உயிரையும் உதிரத்தையும் தியாகத்தோடு அர்ப்பணிக்கிறார்கள். அந்தவகையில் எங்கள் தமிழினத்தின் மீட்பர்களாக மாவீரர்கள் விளங்குகிறார்கள்.

மீட்பர்களின் கனவை ஏந்திச்செல்ல இறைதூதனால் வழிநடத்தப்பட்ட சீடர்கள் இறைதூதனின் கனவை ஏந்திச்சென்று அந்த மக்களின் பூரண விடுதலைக்கு ஊன்றுகோலாகுவர்கள். ஆனால் எங்கள் தமிழினத்துக்கு அவ்வாறான சீடர்கள் வாய்ப்பாக அமையவில்லை. மீட்பர்களின் கனவை ஏந்தி தமிழினத்துக்கு பூரண விடுதலை கொடுக்க யாரும் தயாராக இல்லை. தமிழ் அரசியல்வாதிகளும் தடம்மாறிப்போனார்கள். தமிழ் புத்திஜீவிகளும் தடம்மாறிப்போனார்கள்.

தமிழர்க்குக்கட்சிகள் சார்ந்தும் நல்ல வழிகாட்டிகள் இல்லை. தமிழ்க்கட்சிகள் ஒவ்வொன்றும் மாவீரர்களின் தியாகத்தை ஏலம்விட்டுப்பிழைப்பு அரசியல் செய்கிறது. மாவீரர் தியாகங்களை வைத்து, மக்களின் உணர்ச்சிகளை பகடையாக்கி, தங்களின் பதவிகளையும் தலைமையையும் தக்கவைக்கும் சுயநல அரசியலை மேற்கொள்வதையே காண முடிகிறது.

நியாயமான குறிக்கோள்களோ, நியாயமான விடுதலை சார்ந்த பேரம்பேசல்களையோ மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களையும் கைநழுவ விட்டுவிட்டு, பேரினவாதிகளின் அற்பசலுகைகளுக்காக வாலாட்டும் நாய்களாக மாறிவிட்டனர். இந்த அரசியல் பெருச்சாளிகள் இந்தப்பேரினவாதிகளுக்காக இன்னொரு கைங்கரியத்தையும், மிகத்தந்திரமாக மேற்கொள்கிறார்கள்.

தேர்தல் வரும் காலத்தில் , விடுதலைக்காக குரல் கொடுப்பவர்களையும், அந்த விடுதலை சார்ந்த

கருத்துக்களை பின்பற்றும் மக்களையும் வாக்கு வேட்டைக்காக மிகத்தந்திரமாகப் பயன்படுத்தி, அவர்களை தேர்தல் முடிந்த கையோடு பாராமுகமாக்கி, அவர்களின் தேசியம் சார்ந்த எண்ணக்கருக்களை உடைத்து பிளவுபடுத்துவதோடு, அரசுக்கு சார்பான எண்ணங்களுக்கு வலுவூட்டும் நரித்தந்திரத்தையும் கையாள்கிறார்கள்.




இன்னொரு புறத்தில் இந்த அரசியல் கோமாளிகளின் நரித்தனத்தை உணராது, தாயகத்துப்புத்திஜீவிகளும், தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த புத்திஜீவிகளும், எது இல்லாமல் போனால் எமது தமிழ்ச்சமுகம் ஒன்றுபட்டு வாழும் என நினைத்தார்களோ! இந்தச்சமுகம் எவ்வாறெல்லாம் வாழவேண்டுமென்று தம்மை தியாகித்தார்களோ! அதை எல்லாம் கிஞ்சித்தும் மனங்கொள்ளாமல் சாதி,மத பேதங்களை கிளறிக்கொண்டிருக்கிறார்கள்.

சாதி, மத ,பேதமற்ற சமதர்ம தமிழீழத்தை கட்டி எழுப்புவதே எங்கள் இலட்சியம் ” என தம் உயிரை அர்ப்பணித்தவர்களை சற்றும் நினைத்துப்பார்க்காமல், தூர்ந்ததை கிளறி, மேலும் இந்தச் சமுகத்துக்கு அநீதியை செய்பவரேகளாக இருக்கிறார்கள்.

தேவையான விடயத்தை நோக்கி நேர்கோட்டில் நகர்ந்து , விடுதலைக்கு தேவையான வழிவகைகளை செய்யாமல், மறைகோட்டில் பயணித்து எல்லாவற்றையும் தம் சுயநலத்துக்காக பாழாக்குபவர்களாக விளங்குகிறார்கள். பின்னடைவுகளுக்கு வழிகாட்டுகிறார்கள். மாவீரர்கள் ஒவ்வொருவரும் இந்தத் தேசத்து தாய்மாரில் பிளவு காணவில்லை. மாவீரர்கள் ஒவ்வொருவரும் இந்த தேசத்தில் வாழ்ந்த சகோதர, சகோதரிகளில் பிளவு காணவில்லை.

அவர்களுக்குத் தெரிந்ததும் போதிக்கப்பட்டதும், அவர்களின் சந்ததிக்கென்று ஒரு வாழ்விட நிலம். தமது இனம் வாழ்வதற்கு நிரந்தர விடுதலை. சுபீட்சமான எதிர்காலத்திற்குள் எமது மொழி, எமது இனம் உயரிய

அடையாளத்தோடு, இந்த உலகப்பந்தில் மிளிர வேண்டும் என்பதே. ஒவ்வொருவரும் நெஞ்சத்தை தொட்டுச்சொல்லுங்கள், நாம் அவர்களின் உயரிய தியாகத்துக்கு என்ன கைமாறு செய்கிறோம்?

பேரினவாதிகள் காலத்துக்கு காலம் தமது நகர்வை தந்திரமாக மேற்கொண்டவண்ணமே இருக்கிறார்கள். நாம் இன்னும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கிறோம். காணாமல் போனவர்களை தேடிக்கொண்டிருக்கிறோம். எமது நிலம் இராணுவத்தின் வாழ்விடமாக மாறிக்கொண்டிருக்கிறது. தந்திரமாக இராணுவக்குடியிருப்புகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன.

தந்திரமாக வேலைவாய்ப்பு என்ற போர்வையில், பெரும்பான்மையை சேர்ந்தவர்கள் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் என்ற போர்வையில் குடியேற்றப்படுகிறார்கள். அண்மையில் விவசாயப்பங்கீட்டுக்காணிகள் என்ற நடவடிக்கையும் நிலமிழப்புக்கு காரணமாக வாய்ப்புள்ளது. வெளியில் வீதி அபிவிருத்தி, வீடமைப்பு என்ற நாடகங்களுக்குள் இந்த தந்திரங்கள் மறைக்கப்பட்டு தமது நகர்வை மேற்கொள்கிறார்கள்.

ஒரு பெரும் போராட்டக்காலத்துக்குள் எந்தவித வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கப்பெறாத காலத்தில், உள்ளூர் உற்பத்தியில் உயிர் வாழ்ந்த மக்களை கையேந்தும் வெட்கமற்ற சமுகமாக தொண்டு நிறுவனங்களும் சமுக சேவைகளும் மாற்றியுள்ளன. உயர்ந்த வாழ்வியலும் பண்பாடு, பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, மொழி வளர்ச்சி, விவசாய அபிவிருத்தி, காட்டுவளப்பாதுகாப்பு, விளையாட்டுத்துறை, மருத்துவத்துறை, நீதித்துறை, பாதுகாப்பென வாழ்ந்த சமுகம் போரற்ற காலத்தில் சின்னாபின்னமாகி சிதறுண்டு போகிறது. எனில், விடுதலைத்தாகத்தையும் அர்ப்பணிப்போடும் வழிகாட்டி, செயற்படக்கூடிய சீடர்கள் சுயநலமானவர்களாக மாறியது இந்த தமிழ்ச்சமுகத்துக்கு கிடைத்த சாபமானதா? இந்த சாபத்தில் இருந்து மீண்டெழுவது எப்போது?

பொது நலனுக்காக , இந்த ஒடுக்கப்பட்ட சமுகத்தின் அபிலாசைகளை உலகத்தின் திசைகளுக்கு வெளிப்படுத்திய, ஆயிரமாயிரம் மாவீரர்களின் விருப்பை மறந்து, ஒரு நாளில் மட்டும் அழுவதும், தொழுவதும் என ஒரு அடையாள தினமாக்கி நகரப்போகிறோமா?

யார் இந்த மாவீரர்கள்? எங்கள் சகோதரிகள், எங்கள் சகோதரன்கள், எங்கள் உறவுகள், எங்கள் நண்பர்கள்,எங்கள் உயிரோடும் உணர்வோடும் கலந்த விடுதலையின் தீபக்குறிகாட்டிகள்.

இந்த ஒப்பற்ற வீரர்களின் தியாகத்துக்கு நாம் என்ன கைமாறு செய்யப்போகிறோம்?

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதல் முதல் வீரச்சாவடைந்த லெப்டினன். சங்கர் அவர்களின் நினைவாக, ஒரு பொது நாளில் மாவீரர் தினம் கொண்டாடப்படுகிறதே தவிர, மற்றும்படி ஒவ்வொரு நாளும் இந்த மண்மீட்புக்காக, நிரந்தர விடுதலைக்காக தம்மை ஈகம் செய்தவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே தான் இருக்கிறது.

ஒவ்வொரு நாளும் மாவீரர்திதின் குமுறல்கள் நிறைந்த நாட்களே. விடுதலைத்தீ சுமந்தோர் பயணித்த நாட்களே. இந்த இன விடுதலைக்காக தம் முகத்தை மறைத்து தம் உயிரைத் தியாகம் செய்தவர்களும் அடங்குகிறார்கள். கரும்புலிகளாக வெடித்து காற்றோடு கலந்தவர்களின் நினைவைச் சுவாசித்துக் கொண்டுதான் வாழ்ந்து கொண்டிக்கிறோம். கடலோடு கடலாக கலந்தவர்களும், எங்கள் கடலோடு தான் கலந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இனியாவது எமது சுயநலன்களை மாற்றி , விடுதலையின் நாட்களை விரைவு படுத்துவோமா? என்ன செய்யப்போகிறோம்?

”எங்கே எங்கே ஒரு கணம் விழிகளை இங்கே திறவுங்கள்.. ஒரு கணம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்..”

திறக்கப்பட வேண்டியது மாவீரர்களை நினைத்திருக்கும் மனங்களே . மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட கல்லறைகளைத்தான் எதிரியால் அழிக்க முடியும். மாவீரர்கள் நிறைந்திருக்கும் ஒவ்வொரு தமிழனின் மனங்களில் நிறைந்த கல்லறைகளை அழித்துவிட முடியாது. மனங்களில் இருக்கும் கல்லறைகளில் இருந்து மாவீரர்கள் கேட்கிறார்கள்.

இந்தச் சமுகத்திற்கு நிரந்தர விடுதலையை எப்போது கிடைக்குமென. மனங்களை திறந்து பதிலளிப்போம். கல்லறைகளும் பேசும். மனக்கல்லறைகளை மனச்சாட்சியோடு பேச வையுங்கள்.

---

# ?????????? ????????????? ?????? ?????? ?????






**-??????**

இன அழிப்புச் செய்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறும்போதே தமிழினம் அடக்குமுறைக்குள் தான் தன் வாழ்வியலை நடத்தப்போகின்றது என்பதற்கான அத்தனை எச்சரிக்கை மணிகளும் ஒலித்தாகிவிட்டது. அவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப்போன மாவீரர்களை நினைவு கூருவதற்கான கூட்டுரிமை மறுதலிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய பேரினவாத அரசு மவீரர்களை நினைவு கூருவதற்கு இடமளிக்காது என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். அதனால் அதனை இட்டு பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

ஏனென்றால் முள்ளிவாய்க்காலில் இனவழிப்புச் செய்த வேளையோடு, விடுதலை வேட்கையோடு வித்தாகி மண்ணில் உறங்கிக்கொண்டிருந்த மறவர்களின் துயிலும் இல்லங்களை டோசர்கள் மூலம் நிர்மூலமாக்கியது இதே ராஜபக்ஷ அரசு தான்.

போரில் வெற்றி பெற்றுவிட்டதாக மமதை கொண்டு அவ்வெற்றி கண்ணை மறைக்கவும், மண்டவர்களை கூட தமிழர்கள் மறந்துவிட வேண்டும் என்றும் கங்கணங்கட்டி தயாகத்தில் காணப்பட்ட விடுதலை வீரர்களின் நினைவாலயங்களை அழித்தொழிக்கப்பட்டன.

அந்த அழித்தொழிப்பு நடைபெற்றபோது தற்போதைய ஜனாதிபதி அன்று பாதுகாப்புச் செயலாளர் என்ற வேறுபாடு மட்டுமே இருந்தது. ஆனால் நிகழ்ச்சி நிரல் ஒன்றாகத்தான் இருந்தது. தற்போதும் அந்த நிகழ்ச்சி நிரல் அப்படியே தான் இருக்கிறது.

அதுமட்டுமன்றி அரச இயந்திரத்தின் முழுமையான துணையுடன் அந்த நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. ஏற்கனவே தமிழர் தாயகத்தில் ஒன்றரை இலட்சம் படைகள் நிலைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தாயகத்தில் சாதாரணமாக நடமாடும் வெகுசன மனிதனுக்கான சுதந்திரமே பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் சிங்கள தேசியவாதத்திடம் விடுதலைக்காக தம் உயிர்களை ஈகம் செய்ய புனிதர்களை நினைவு

கூருவதற்கான அனுமதியை எதிர்பார்ப்பதே அபத்தமானது.

அதனைவிடவும், அரசாங்கத்தினை சூழவும் போரில் முன்னின்று போர்க்குற்றங்களை இழைத்த அத்தனை அதிகாரிகளும் பதவி நிலைகளில் காணப்படுகின்றார்கள். தம்மிடம் தோற்றவர்களை நினைவு கூருவதற்கு இடமளிப்பதா என்ற குறுகிய மனோநிலையினைக் கொண்ட அத்தரப்பினர் எள்ளளவு நினைவு கூரலுக்கான இடைவெளியையும் வழங்கி விடக்கூடாது என்பதில் திடமாக இருக்கின்றனர்.



கடந்த தடவை கோட்டாபயவுக்கு அதிகாரம் கைக்குவந்து சொற்ப நாட்கள் என்பதால் சடுதியாக எதுவும் செய்திருக்க முடிந்திருக்கவில்லை. வெறுமனே புலனாய்வாளர்களை முடுக்கிவிட்டு தகவல்களை மட்டுமே திரட்டி வைக்க முடிந்தது. ஆனால் அதற்கு பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தியாக தீபம் திலிபனின் நினைவேந்தல் ஆகியவை திட்டமிட்டு தடுக்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பங்களில் தமிழினம் விழித்துக்கொண்டது. ஆனால் ஒரு தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் ஊடாக இணக்கப்பாடொன்றை எட்டியிருக்காதுள்ளமையும், பொறிமுறையொன்றை ஏற்படுத்தியிருக்காமையும் துரதிஷ்டம் தான்.

அரசியல் ரீதியான பேதங்கள் இருந்தாலும், கொள்கைகள் ரீதியான கோபதாபங்கள் இருந்தாலும், மாவீரர்கள் நம் அனைவருக்குமாகவே களம் கண்டு மடிந்தார்கள் என்ற புரிதல் தாயகத்தில் உள்ள அனைத்து அரசியல் தரப்பிடமும் ஏற்பட வேண்டியது கட்டாயமானது.

எனென்றால், வீர விழுதுகளாய் திளைத்தவர்களை மாண்ட பின்னர் அஞ்சிலிப்பதற்கு வழியில்லை. அவர்கள் அமைதியாக உறங்கிய ஆலயங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு கற்குவியல்களாக்கப்பட்டுள்ளன. இன்னும் சில இடங்கள் பிணந்தின்னி கழுகுகள் போன்று படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

தமக்காக சமர்களமாடியவர்களை அஞ்சிலிப்பதற்கு கூட முடியாவில்லையே என்ற ஏக்கத்துடன் இருக்கும் தாயகத்தின் சாதாரண வெகுஜன மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாக இருக்கின்றது.

வீரர்களுக்கான மரியாதையையும், அன்புக்குரிய உறவுகளின் மன ஆற்றுப்படுத்தலையும் மையப்படுத்திய புரிதலின் காரணமாகவே மேதகு.வே.பிரபாபகரன் அவர்கள், தமிழீழ விடுதலைப் போரில் முதல் களச் சாவடைந்த வீரர் லெப்ரினன்ட் சங்கர் (சத்தியநாதன்) அவர்களின் நினைவு நாளான நவம்பர் 27 ஆம் நாளை 1989 ஆம் ஆண்டு மாவீரர்கள் நாளாக பிரகடனப்படுத்தினார்.

அன்றிலிருந்து தாயகமெங்கும் தமிழீழ மாவீரர் நாள் தமிழீழ மக்களாலும், உலகத் தமிழர்களாலும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் மறவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலித்து அவர்களின் அன்புக்குரியவர்களும் மனங்களும் ஆற்றுப்படுத்தப்பட்டே வந்திருக்கின்றது.

ஆனால் இம்முறை, அவ்வாறான நிலைமை இருக்கவில்லை. உள ஆற்றுப்படுத்தலுக்கு பதிலாக உளக்குமுறலும், ஏக்கமும், தாகமும் தான் அதிகரித்துள்ளது. அந்தமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தி நடைமுறைச்சாத்தியமான ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டியது அந்த மக்களின் ஆணை பெற்றவர்களின் பொறுப்பாகின்றது.

ஆணைபெற்றவர்கள் பிரிந்து நிற்பதும், ஆணைபெற துடிப்பவர்கள், நினைவு கூரலை அரசியல் மயப்படுத்தவதும், ஆணைபெற்றிருப்பவர்களில் சிலர் அரசியலில் நிலைபெறுவதற்காக மாவீரர்களின் உறவுகளை உரிமை கொண்டுவதும் என்று வேடிக்கைகள் பல அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

விடுதலைக்காக ஏங்கி நிற்கும் இனமொன்றின் பிரமுகர்கள் இவ்வாறு நடந்துகொள்வதானது, மிக கீழ்த்தரமான மூன்றாம் நிலைச் செயற்பாடாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது. மக்களுக்கான அரசியலை மறந்து மாண்டவர்கள் மீது அரசியல் செய்வது போன்ற இழிநிலை வேறெங்கும் இல்லை.

அதுவொருபுறமிருக்கையில், இந்தமுறை மாவீரர்களின் நினைவு கூரல்களுக்கு காவல்துறையினரின் முழுமையான பின்னணியில் நீதிமன்றங்களின் ஊடாக தடை உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த தடை உத்தரவுகளுக்கு மேலதிகமாக கொரோனா தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது.

அதனைப்பயன்படுத்தியும், கூட்டு நினைவு கூரல்களுக்கான தடைகள் முறையாக பெறப்பட்டுள்ளன.

இந்த தடைகளை சட்ட ரீதியாக உடைப்பதற்கு இம்முறை முயற்சியொன்று எடுக்கப்பட்டது. ஆனாலும் யாழ்.மேல்நீதிமன்றம் அதற்கான ‘அதிகாரம்’ தன்னிடமில்லை என்று கைவிரித்துவிட்டது.

வடக்கில் உள்ள மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் மட்டும், சட்டங்களை மீறினால் கைது செய்யுங்கள் என்று கூறி தடை உத்தரவை விதிப்பதற்கு மறுதலித்துள்ளது. மல்லாகம் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்த காங்கேசன் துறை காவல்துறையினர் தாம் தோல்வி கண்டுவிட்டதாக எண்ணி, கைதுகளை செய்வதற்கு திட்டமிட்டு வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா நீதிமன்றங்களின் ஊடாக நீதியைப் பெற முடியும் என்றால் இனவழிப்புக்கான நீதிக்காக சர்வதேச விசாரணையொன்றை கோர வேண்டிய அவசியமே இருந்திருக்காது. இந்த பட்டறிவு கூட இல்லாது சட்டரீதியாக நினைவுகூரலுக்கு அனுமதி பெற முயன்ற ‘சட்டாம்பிகளை’ என்னவென்று கூறுவது. சரி, அவர்களும் முயன்று பார்த்தார்கள் என்று விட்டுவிடலாம்.




ஆனால் நினைவு கூரல் விடயமானது வெறுமனே சட்டப்பிரச்சினை அல்ல. தனிமனித அடிப்படை உரிமைப் பிரச்சினை, தமிழர்களின் கலாசார, பண்பாட்டுப் பிரச்சினை, தமிழீழ கூட்டுரிமைப் பிரச்சினை. அரசியல் ரீதியான பிரச்சினை, ஆகவே இந்த விடயத்தினை இத்துடன் மறந்துவிடலாகாது.

இந்தவிடயத்தினை அரசியல் தரப்பினர் கையாளவும் இடமளிக்க முடியாது. ஏனென்றால் வெறுமனே இது அரசியல் பிரச்சினை மட்டுமல்ல. இனமொன்றின் பிரச்சினை, பாரம்பரிய சமூகமொன்றின் பிரச்சினை. தாயகத்தில் வாழும் அத்தனை தமிழுறவுகளின் பிரச்சினை. ஆகவே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்றால் தாயகத்தின் அனைத்து தரப்புக்களும் அணி திரள வேண்டும். நினைவாலயங்கள் சீராக பராமரிக்கப்பட வேண்டும். புனரமைக்கப்பட வேண்டும். மறவர்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவை அனைத்திற்குமான பொறிமுறையொன்றும் வேண்டும். இந்த மாவீரர்கள் நாள் அதற்கான அடித்தளத்தினை இடவேண்டும். இதில் புலம்பெயர் உறவுகளும் துணையாக தூண்களாக இருக்க வேண்டும். உரிமையோடு சுடரேற்றி உறுதி எடுக்கும் நாளாக இது அமைய வேண்டும்.